ஓசை: 25 குரல்: 168 புதன்கிழமை 01 டிசம்பர் Wednesday 01st December 2021 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760






www.facebook.com/Thinakkural www.twitter.com/ThinakkuralNews email: daily@thinakkural.lk | www. thinakkural.lk

# தினக்குரல்

தினக்குரல்

An Independent Daily Voice In Tamil

Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021

25 ANNIVERSARY

பக்கம்: 12 | விலை: 30




## பண்டிகைக் காலத்தில் நாடு மூடப்படுமா?

### இதுவரை தீர்மானம் இல்லை

ந.ஜெயகாந்தன்

பண்டிகைக் காலத்தில் நாட்டை மூடுவதற்காக இதுவரையில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணை பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்

பக்கம் 04

# 'ஒமிக்ரோன்' திரிபை எதிர்கொள்ளத் தயார்

### அதனால் மரணங்கள் ஏற்படுமா? அதற்கு தடுப்பூசி சாத்தியமா?

### உலக சுகாதார ஸ்தாபனம் எதையும் கூறவில்லை; இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



'ஒமிக்ரோன்' கொரோனா திரிபு வைரஸ் பரவும் வேகம், அதற்கான நோய் அறிகுறிகள் என்ன? பி.சி.ஆர். மூலம் அதனை இனங்கண்டுகொள்ள முடியுமா? அதனால் மரணங்கள் ஏற்படுமா? அதற்கு தடுப்பூசி சாத்தியமா? என்பது தொடர்பில் இதுவரை உலக சுகாதார ஸ்தாபனம் தெளிவான விபரங்கள் எதையும் தெரிவிக்கவில்லை. எனினும் 15 சர்வதேச நாடுகளில் பரவி வரும்

பக்கம் 04

## 60 இலட்சம் மக்களுக்கு ஆபத்தா?

### எரிவாயு வெடிப்பில் இருந்து பாதுகாக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



சமையல் எரிவாயு வெடிப்பில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.

பக்கம் 04

## ஒமிக்ரோன் பரவினால் பேரழிவே ஏற்படும்

### எச்சரிக்கிறார் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கு ஒப்பிடுகையில் இலங்கையில் கொவிட் மரண வீதம் அதிகரித்தே காணப்படுவதாகவும், இவ்வாறான நிலைமையில் ஒமிக்ரோன் தொற்று நாட்டுக்குள் பரவினால் சுகாதார துறை

பக்கம் 04

## கஞ்சாவை விற்கத் தயாராகும் அரசு

### ஏற்றுமதி செய்ய சட்டம் வருகிறது

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

கஞ்சாவை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளதாக சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மருத்துவ

பக்கம் 04

## இதுவரை 21 வெடிப்புகள்

### நேற்றும் இரண்டு சம்பவங்கள்

க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக எரிவாயு கசிவின் மூலமான வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்றும் இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நவம்பர் மாதத்தில் இதுவரை 21 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பக்கம் 04

## ஆயுத முனையில் மக்களை மிரட்டி யாழில் காணி ஆக்கிரமிப்பு முயற்சி

### எதிர்த்து மாதகலில் நேற்றும் போராட்டம்





கடற்படையினரை ஆயுதங்களுடன் குவித்து மக்களைமிரட்டி பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை கடற்படைக்கு ஆக்கிரமிக்கும் முயற்சி மாதகல் கிழக்கில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் மேற்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை ஆக்கிரமிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்படவிருந்த அளவீட்டு முயற்சி மக்கள், அரசியல்வாதிகளின் போராட்டத்தை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் மாதகல் கிழக்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக

பக்கம் 04

## சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள்

### ஜனாதிபதி நியமித்த குழு ஆராயும்

பக்கம் 04

## தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடியா?

### முஜிபுர் ரஹ்மானின் குற்றச்சாட்டால் சபையில் பெரும் அமளிதுமளி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பக்கம் 04

## அரசுக்குள் பிளவென கருத வேண்டாம்

### அமைச்சரவை பேச்சாளர் டளஸ்

ந.ஜெயகாந்தன்

பக்கம் 04






## வடக்கு வைத்தியசாலைகளை சுவீகரிப்பதை கைவிடுங்கள்

### வன்னி மாவட்ட எம்.பி. வினோநோகராதலிங்கம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிக்கின்ற செயற்பாட்டை உடனடியாக கைவிட வேண்டுமென சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான வினோ நோகராதலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள்,

பக்கம் 04




LITRO GAS

# முக்கிய அறிவிப்பு

தேசிய எரிவாயு வழங்குனரான Litro Gas Lanka Ltd, தான் இறக்குமதி செய்யும் LP வாயுவானது, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புரபேன் மற்றும் பியூற்றேன் கலவையைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதுடன், அதன் ஏற்றலின் போதும் இறக்கலின் போதும் **GEO-CHEM LANKA** டுவுனு நிறுவனத்தால் இரு தடவைகள் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

## GEO-CHEM அறிக்கை

GEO CHEM

Internationals Independent Inspection & Testing Company

GEO - CHEM LANKA (PVT) LTD.

LPG Quality For September to November 2021

| Month | Date | Vessel Name | Total C3 %Weight | Total C4 % Weight | Vapour Pressure (Bar) |
|---|---|---|---|---|---|
| September | 03.09.2021 | Perikilis | 37.27 | 62.48 | 6.89 |
| | | | 37.09 | 62.68 | 6.86 |
| | 06.09.2021 | Bermuda | 38.83 | 59.81 | 6.96 |
| | | | 38.59 | 59.85 | 6.95 |
| | 09.09.2021 | Bird | 34.15 | 63.93 | 6.42 |
| | | | 34.85 | 63.13 | 6.50 |
| | 14.09.2021 | Bolivar | 25.10 | 69.54 | 5.91 |
| | | | 26.27 | 67.87 | 6.16 |
| | 17.09.2021 | Patreas | 25.27 | 74.38 | 5.64 |
| | | | 25.12 | 74.83 | 5.65 |
| | 18.09.2021 | Bermuda | 38.39 | 60.15 | 6.89 |
| | | | 37.40 | 62.15 | 6.69 |
| | 19.09.2021 | Bird | 37.77 | 61.82 | 6.70 |
| | | | 37.49 | 62.11 | 6.67 |
| | 24.09.2021 | Perikilis | 38.64 | 61.29 | 6.55 |
| | | | 36.86 | 63.82 | 6.61 |
| | 28.09.2021 | Bird | 29.66 | 69.93 | 6.21 |
| | | | 28.71 | 70.85 | 5.92 |
| | 30.09.2021 | Bolivar | 33.43 | 65.86 | 6.45 |
| | | | 34.40 | 65.08 | 6.54 |
| October | 02.10.2021 | Bird | 38.96 | 60.58 | 6.94 |
| | | | 38.39 | 61.16 | 6.88 |
| | 08.10.2021 | Perikilis | 36.86 | 62.71 | 6.72 |
| | | | 36.73 | 62.84 | 6.71 |
| | 11.10.2021 | Bolivar | 33.68 | 65.91 | 6.44 |
| | | | 36.14 | 63.44 | 6.69 |
| | 13.10.2021 | Patreas | 29.40 | 65.00 | 6.57 |
| | | | 28.17 | 66.30 | 6.34 |
| | 14.10.2021 | Perikilis | 39.92 | 59.67 | 7.07 |
| | | | 37.20 | 62.41 | 6.86 |
| | 21.10.2021 | Kilburn | 38.16 | 62.09 | 6.62 |
| | | | 34.88 | 63.87 | 6.45 |
| November | 02.11.2021 | Bird | 36.10 | 62.21 | 6.57 |
| | | | 34.87 | 63.38 | 6.45 |
| | 04.11.2021 | Bolivar | 32.89 | 65.73 | 6.23 |
| | | | 33.80 | 65.44 | 6.26 |
| | 05.11.2021 | Patreas | 33.27 | 65.25 | 6.31 |
| | | | 37.41 | 60.89 | 6.86 |
| | 08.11.2021 | Bird | 34.03 | 65.16 | 6.38 |
| | | | 37.84 | 61.68 | 6.75 |
| | 11.11.2021 | Bolivar | 39.54 | 60.38 | 6.87 |
| | | | 39.40 | 60.40 | 6.85 |
| | 16.11.2021 | Patreas | 32.83 | 67.29 | 6.26 |
| | | | 33.87 | 66.13 | 6.33 |
| | 18.11.2021 | Bird | 36.18 | 63.61 | 6.64 |
| | | | 35.37 | 64.63 | 6.46 |
| | 22.11.2021 | Patreas | 38.48 | 61.38 | 6.77 |
| | | | 38.78 | 61.08 | 6.81 |
| | 24.11.2021 | Bird | 35.76 | 64.05 | 6.48 |
| | | | 38.87 | 60.92 | 6.80 |
| | 26.11.2021 | Bolivar | 38.78 | 61.03 | 6.81 |
| | | | 37.31 | 62.51 | 6.67 |
| | 29.11.2021 | Patreas | 39.84 | 60.25 | 6.89 |
| | | | 37.84 | 62.77 | 6.84 |
| | Average Values | | 35.20 | 63.76 | 6.55 |

L N° 1496

## 2019-2021 வரை தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்த விபரம்

1. LPG Quality Specification

| Properties | Unit | Test Method | Result |
|---|---|---|---|
| Vapor Pressure, gauge @ 37.8 Deg.C | K Pa | ASTM D-1267 or ASTM D-2598 | 420 - 830 max |
| Density | - | ASTM D-1657 or ASTM D-2598 | Report |
| Total Sulphur (After stenched) | PPMW | ASTM D-2784 or ASTM D-3246 | 50 max |
| Corrosion, Copper Strip 1 hour at 37.8 deg C | - | ASTM D-1838 | 1 max |
| Free Water | - | Visual Inspection | None |
| Odorant (Ethylmercaptan) (if stenched only) | L/1000MT | * Smell Test | 26 |
| Olefin (required only from complex refinery sources) | % Mole | ASTM D-2163 | 5 max |
| C2 hydrocarbons | % Weight | ASTM D-2163 | Report |
| C3 propane | % Weight | ASTM D 2163 | TotalC3 saturates 25 - 60 |
| C3 Propylene | % Weight | ASTM D 2163 | TotalC3 saturates 25 - 60 |
| C4 I-butane | % Weight | ASTM D 2163 | Total C4 saturates 75 - 60 |
| C4 N - butane | % Weight | ASTM D 2163 | Total C4 saturates 75 - 60 |
| C4 Butylenes | % Weight | ASTM D 2163 | Total C4 saturates 75 - 60 |
| C5 and higher hydrocarbons | % mole | ASTM D 2163 | 2 max (pentenes 0.5 Max) |
| Residue Test | Ml/100ml | ASTM D 2158 | 0.05max. |
| Oil Stain | | ASTM D-2158 | Pass |
| Dienes content as 1,3 butadienes (Required only from complex refinery sources) | % Mole | ASTM D-2163 | 0.5max. |
| MON (Motor Octane number) | - | ASTM D-2598 | 89 min. |

Odour should be distinctive, unpleasant and non-persistent at a dilution 1:250 with air. Sources shall control H2S and Fluorine to internal production limits.

கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயுவானது, உரிய டெண்டர் ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதுடன், அவை கிடைக்கப் பெற்றவுடன், எழுந்தமாறான அதன் மாதிரிகள் **GEO-CHEM LANKA** நிறுவனத்தால் ஆய்வு செய்யப்படுகிறது. எனவே, இந்தச் செயல்பாட்டின் போது வேறு எந்தவொரு கலப்படமோ, கலவையில் மாற்றமோ மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், கிடைக்கின்ற அடிப்படை மூலத்திலிருந்தான அதே தயாரிப்பையே நுகர்வோர் பெறுகின்றனர்.

சமீபத்திய சம்பவங்கள் மற்றும் குழப்பங்களுக்கான காரணம், குறைந்த தரத்திலான ரெகுலேட்டர்கள், குழாய்கள், அடுப்புகள் மற்றும் பாவனையாளர்களின் அலட்சியம் காரணமாக ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஏதேனும் அவசரநிலை அல்லது சிக்கல்கள் தொடர்பிலான உதவி மற்றும் வழிகாட்டலுக்கு **1311** எனும் உடனடி தொலைபேசி இலக்கத்தை வாடிக்கையாளர்கள் தொடர்பு கொள்ளலாம். நுகர்வோர் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் தயாரிப்பை சேதப்படுத்துவதையோ அல்லது தவறாக கையாளுவதையோ தவிர்க்க வேண்டும்.




1311 litrogas.com

# எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது ஏன்? இன்று அவசர ஆலோசனைக் கூட்டம்

## கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு

**பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்**

எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அவசர ஆலோசனை உப குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இதற்கான அறிவிப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதனையடுத்து எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு தொடர்பில் கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிடம் கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன பதிலளித்த நிலையில் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக அவசர ஆலோசனை உப குழுக் கூட்டத்தை கூடிடலாம் என்ற யோசனை சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவினால் முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்தே எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அவசர ஆலோசனை உப குழுக் கூட்டத்தை கூட்டுமாறு சபாநாயகர் அறிவித்ததுடன் இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இதேவேளை எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் அவசர ஆலோசனை உப தெரிவுக்கு செயற்குழு ஒன்றையும் அமைக்குமாறு எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

# காணி ஆக்கிரமிப்பை எதிர்த்தோருக்கு கொட்டன்களுடன் மிரட்டல் படம் பிடித்தும் அச்சுறுத்தல்





யாழ்ப்பாணம் மாதகல் கிழக்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை ஆக்கிரமிக்க நேற்று எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்த காணி உரிமையாளர்களை படம் பிடித்தும் கொட்டன் பொல்லுகளைக் காட்டியும் கடற்படையினர் அச்சுறுத்தினர்.

போராட்டத்தின்போது அங்கிருந்த கடற்படை சிப்பாய் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை படம்பிடித்து அச்சுறுத்தும் விதத்தில் செயற்பட்டார்.

இதேவேளை அங்கிருந்த புலனாய்வாளர் ஒருவர், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மீது கை காட்டி, மிரட்டி அச்சுறுத்தல் விடுத்தார்.

மேலும் ஒரு கடற்படை சிப்பாய் கொண்டாளைக் கையில் வைத்து மிரட்டல் விடுத்துக்கொண்டிருந்தார்.

இதனைவிட அச்சுறுத்தும் வகையில் கடற்படையினர் போராட்டத்தின்போது ஆயுதங்களைத் தாங்கியவாறு துப்பாக்கிச் சூடு நடத்த தயார் நிலையில் இருந்தவர்கள் போன்று அச்சுறுத்தினர்.

மக்களது ஜனநாயக முறையிலான போராட்டத்தை ஒடுக்கும் விதமாக இவ்வாறு செயற்படுவது, அரசின் அராஜக போக்கினை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

# வாழைச்சேனையில் இருந்து காணாமல்போன மீன்பிடிபடகு சென்னையில் கரையொதுங்கியது

**வாழைச்சேனை நிருபர்**

வாழைச்சேனையில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன படகு நேற்று முன்தினம் சென்னை காசிமேடு பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

இந்த நிலையில் காணாமல்போன கடற்றொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.



வாழைச்சேனையில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம் 26ம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற காணாமல் போன நிலையின் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த படகின் மூலம் திருவள்ளூர் மாவட்டம் காட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அதானி துறைமுகத்தில் உள்ளே நுழைந்துள்ளதாக கடற்றொழில் அமைச்சின் மூலம் தகவல் கிடைத்துள்ளதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 26ம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற இந்தப் படகு மீன்பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது முதல் நாளிலேயே படகு என்ஜின் பழுது ஏற்பட்டு விட்டது என்றும் காற்று வாக்கில் அந்தமான் பகுதிக்கு சென்றதாகவும் தெரிவித்தனர்.

# உரம் பெறச் சென்றவர் வான் மோதிப் பலி

**துறைநீலாவணை நிருபர்**

வவுணதீவுபொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாண்டியடி வாழைக்காலை பிரதான வீதியில் இடம் பெற்ற விபத்தில் அம்பிளாந்துறை பிரதேசத்தைச்சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மயிலப்போடி சுந்தரலிங்கம் (வயது 39) என்பவர் பலியானதான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து தனது வயலுக்கான உரத்தை பெற்றுக்கொள்வதற்காக மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது வீதியில் எதிர்திசையில் பயணித்துக்கொண்டிருந்த வான் கட்டுப்பட்டை இழந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் மீது மோதியதில் இவர் உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.



# புத்தளத்தில் வெள்ள நீரை அகற்ற கோரி பொது மக்கள் ரயில் மறியல் போராட்டம்

முந்தல்,கற்பிட்டி,புத்தளம் நிருபர்கள்

புத்தளம் பிரதேச செயலகத் திற்குட்பட்ட கடையாக்குளம் மணக்குன்று மற்றும் நூர்நகர் உள்ளிட்ட பல தாழ்ந்த பகுதி கள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதினால் தாங்கள் சி ரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவித்தும் இந்த வெள்ள நீ ரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க கோரியும் நேற்று செவ் வாய்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை புத் தளம் அநுராதபுரம் பிரதான வீதி யின் ரயில் கடவையை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

இதன் போது அருவாக்காட் டில் இருந்து சீமேந்துக்கான மண்ணை ஏற்றிவந்த ரயிலும் மறிக்கப்பட்டுள்ளதுடன் அவ் விடத்திற்கு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் புத்தளம் நகர பிதா எம் எஸ் எம் ரபீக் ஆகியோர் போராட்டக்காரர்க ளுடன் கலந்துரையாடியும் எவ் வித தீர்வும் கிடைக்காமையி னால் தொடர்ந்தும் போராட்டம் இடம் பெற்று வந்த நிலைமையில் மாலை 3.30 மணியளவில் அங்கு வருகை தந்த புத்தளம் மாவட்ட செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரை யாடிய போதிலும் அதற்கான தீர்வு கிடைக்காமையினால் அங்கு வருகை தந்த அதிகாரிகளுடன் கலந்துரை யாடி இதற்கான தீர்வை தருவதாக கூறிச் சென்றுள்ளார்.

இப்போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கை ரயில் பாதை யிலுள்ள மதகை அகலப்படுத்தி தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும்.

## ஆயுத முனையில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

தனியார் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி கடும் அச்சுறுத்தல்களுக்கு மத் தியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் கிழக்கு ஜெ 150 கிராம உத் தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியா ருக்குசொந்தமான காணிகளை கடற்படையி னரின் தேவைக்கு சுவீகரிப்பதற்காக அளவீட்டு பணிகள் நேற்று நில அளவை திணைக்களத்தி னால் முன்னெடுக்கப்படவிருந்தது.

இதற்கிடையே நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கடற்படையினர் தமது வீட்டுக்கு வருகைதந்து காணியினை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டதாக காணி உரிமையாளர் தெரிவித்தார். அவ் அதற்கு சம்மதம் தெரிவிக்காத நிலையில் நேற்று பலவந்தமாக காணியை ஆக்கிர மிக்கும் முயற்சியாக காணி அளவீட்டு பணியை முன்னெடுக்க நில அளவைத் திணைக்களத்தினர் அங்கு வந்தனர்.

அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்து வதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூ டிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதன்போது கடற்படையினர் கொட் டான்களுடன் குவிக்கப்பட்டு, மக் களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர். காணியினை அளப்பதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்வி டத்தில் இருந்து சென்றுள்ளனர்.

தொடர்ந்தும் அரசியல் பிரமுகர்கள் மற் றும் கிராம மக்கள் கடற்படை முகாமிற்கு முன்பு அமர்ந்து இருந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத் திற்கு வருகைதந்த இளவாலை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினர். சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி எதிர்வரும் இரண்டாம் திகதி சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடுவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் கலைந்து சென்றனர்.

இவ்வாறு தங்களது காணிகளை படையின ரின் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க தினம் தினம் மக்கள் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இதுவரை 21...

முன்பக்கத் தொடர்ச்சி...

நேற்று நியத்தலாவையிலுள்ள தொடம் வத்தை ஹெலவத்தையில் உள்ள வீடொன் றில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக நியத்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதுருகசர பிரதேசத்தில் கடையொன்றின் பின்புறத்தில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் நாடு முழுவ தும் பத்து எரிவாயுடன் தொடர்புடைய வெடிப் புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹட்டன் மல்லியப்பூ, ஜாஎல, மாரவில, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹங்வெல்ல, பாதுக்க, எம்பிலிப்பிட்டிய, மாவனல்லை மற் றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் இவ்வெ டிப்பு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 28 ஆம் திகதி வரை மொத்தமாக ஒன்பது வெடிப்புச் சம்பவங் கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெலிகம கபரதொட்ட, பொலனறுவை - வெலிகந்த, இரத்தினபுரி, கொழும்பு 7 குதிரைப்பந்தயத் திடல், பன்னிப்பிட்டிய - கொட்டாவ, சாய்ந் தமருது, யாழ்ப்பாணம் கந்தரோடை மற்றும் கேகாலை - கஹட்டப்பிட்டி, நிக்கவெரெட்டிய கந்தேகெதர ஆகிய பகுதிகளில் இச்சம்பவங் கள் பதிவு செய்யப்பட்டன.

எரிவாயு நிறுவனங்களினால் அங்கீகரிக் கப்படாத எரிவாயு கலவையில் ஏற்படுத் தப்பட்ட மாற்றம் காரணமாகவே நாடு முழுவதும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதாக தொடர்ச்சியாக குற்றச்ச ாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

## கஞ்சாவை...

முன்பக்கத் தொடர்ச்சி...

மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக் கொடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை வரவு செலவுத் திட்டத்தின் சுகாதார அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரி வித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் குறிப்பிடுகை யில், சம்பிரதாய மருந்துவத்தை சட்டபூர் வமாக்க நடவடிக்கையெடுக்கப்படவுள்ளது. குறிப்பாக கஞ்சா மூலம் புற்று நோயை குணப்படுத்த முடியுமென கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் சுதேச மருத்துவ முறைகளை ஊக்குவித்து அதற்கு தேவை யான மூலப்பொருட்களை இங்கேயே உற் பத்தி செய்ய தேவையான நடவடிக்கைளை எடுக்கவுள்ளோம்.

இதன்போது அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய வகையில் வேலைத்திட்டங்க ளையும் நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக கஞ்சாவை ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி அதனை ஏற்றுமதி செய் வதற்கு தேவையான சட்டத்தை பாராளு மன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## 60 இலட்சம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கை யில்; நாட்டில் 60 இலட்சம் மக்கள் வீடுகளில் ச மையல் எரிவாயுவை பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்து. இந்நிலையில் கடந்த சில தினங்களாக நாட்டின் பல்வேறு இடங்களில் எரிவாயு சிலிண்டர் வெடித்த சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. கடந்த இரண்டு தினங்களில் மாத்திரம் இவ்வாறான சம்பவங்கள் 11 பதிவாகி இருக்கின்றன.

இந்த பிரச்சினை இந்த வருடம் ஆரம்பத் தில் 18 லீற்றர் கொள்ளவுகொண்ட ஹைப் ரிட் வகை சிலிண்டர் ஒன்றை அறிமுகப்ப டுத்திய பின்னராகும். நுகர்வோரை ஏமாற்றி அதிக லாபம் ஈட்டிக்கொள்ளும் நோக்கிலே இது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறித்த நிறுவ னத்துக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட் டுள்ளதாக ராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ள போதும் இடம்பெற்ற நடவடிக்கையால் வெடிப்பு சம்பவங்கள் நாடுபூராகவும் இடம் பெறுவதை அறியக்கிடைக்கின்றன.

சிலிண்டரின் இரசாயன கலவையில் அளவில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை பாது காப்பு அதிகாரசபை முன்னாள் பணிப்பாளர் மற்றும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்தி ரகரிப்பு நிலைய இரசாயன பிரிவு முன்னாள் பிரதானி ஆகியோர் ஊடக சந்திப்பொன்றின் போது தெரிவித்திருந்தனர்.

சிலிண்டரில் கசிவு இடம்பெறுவதை பொது மக்கள் சவர்க்கார நுரையை சிலிண்ட ரின் காஸ் வெளியாகும் இடத்துக்கு இட்டு பரிசோதித்து பார்த்து, இவ்வாறான பல சிலிண்டர்கள் நாட்டுக்குள் இருப்பதை உறு திசெய்திருக்கின்றனர்.

அதனால் தற்போது நாட்டில் இருக்கும் எரி வாயு சிலிண்டர் ஒன்றில் இருக்கவேண்டிய இரசாயன கலவையின் அளவு எத்தனை, தர நிர்ணயம் உறுதிப்படுத்தி இருக்கும் கலவை யின் அளவா தற்போதுள்ள காஸ் சிலிண்டர்க ளில் இருக்கின்றது, அதேபோன்று நாட்டுக்கு காஸ் கொண்டுவரும் பிரதான இரண்டு நிறுவ னங்களும் 2021 ஜனவரியில் இருந்து எந்தளவு தொகை காஸ் கொண்டுவந்திருக்கின்றது. அந்த காஸ் சிலிண்டர்களின் இரசாயன கலவையின் அளவு என்ன, தரம் அற்றது என சந்தையில் இருந்து காஸ் சிலிண்டர்களை அகற்றியதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். அவ்வாறு அகற் றிய காஸ் சிலிண்டர்களை என்ன செய்தது.

அத்துடன் இந்த பிரச்சினைக்கு குறுகி ய, மத்திய மற்றும் நீண்டகால தீர்வுகளை வழங்கி இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். அதற்காக பாராளுமன்ற தெரி வுக்குழு ஒன்றை அமைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## ஒமிக்ரோன் பரவினால்...

முன்பக்கத் தொடர்ச்சி...

பெரும் நெருக்கடியை எதிர்நோக்க நேரி டும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினரான முன் னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டத் தின் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப் படுத்துவதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்ட போதும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் கொரோனா மரணங் களின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்ப டுகின்றது.

நாடொன்றில் ஒரு மில்லியன் பேரில் கொரோனா தொற்றால் இறப்போரின் எண்ணிக்கை தொடர்பில் பார்த்தால் எமது நாட்டில் ஒரு மில்லியன் பேருக்கு 664 பேர் மரணமடைந்துள்ளனர். அந்தத் தொகை இந்தியாவில் 334 ஆகவும் மாலைதீவில் 442ஆகவும் ஆப்கானிஸ்தானில் 182 ஆகவும் பங்களாதேஷில் 160 ஆகவும் பாகிஸ்தானில் 126 ஆகவும் காணப்படுகிறது.

அந்தவகையில் ஏனைய நாடுகளை விட, எமது நாட்டில் அதிகமானோர் கொரோனா வைரஸ் நோயினால் மரணமடைந்துள்ளர். எமது நாட்டில் சுகாதாரத்துறை அரசியல் கண் ணாடி கொண்டே பார்க்கப்படுகிறது. ஆளும் கட்சி பதவியில் உள்ள காலத்தில் எதிர்க்கட்சி அதுபற்றி விமர்சிப்பதும் எதிர்க்கட்சி பதவி யில் உள்ள காலத்தில் ஆளும் கட்சி அதுபற்றி விமர்சிப்பதுமே இடம்பெறுகிறது.

இதனை நிறுத்தி சரியான வேலைத்திட் டங்களை முன்னெடுக்க வேண்டும். இந்நி லையில் ஒமிக்ரோன் நாட்டுக்குள் வருவதை தடுக்க வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதற்காக விமான நிலையத்தில் முறையான முகாமைத்துவம் அவசியமாகும். இதுபோன்ற வைரஸ் நாட்டுக்குள் வந்தால் எங்களை போன்ற சிறிய நாடுகளினால் ஈடுகொடுக்க முடியாது. இதனால் எத்தனை பேர் எஞ்சுவார்கள் என்றும் கூற முடியாது இதனால் முறையான வேலைத்திட்டங்கள் அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி...

முன்பக்கத் தொடர்ச்சி...

கொரோனா தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான முஜிபுர் ரஹ்மான் முன் வைத்த குற்றச்சாட்டையடுத்து சபையில் பெரும் அம ளிதுமளி ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற் றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப் பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய முஜிபுர் ரஹ்மான் எம்.பி .கொரோனா தடுப் பூசி கொள்வனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம்சாட்டியதுடன் கொரோனா தடுப்பூசிகளின் விலைகளை விடவும் அதிக விலை கொடுத்து வாங்கியது ஏன்? ஆரோக்கியம் குறைந்த தடுப்பூசிக ளுக்கு அதிக விலை கொடுத்தது ஏன்?எனவும் கேள்விக் கணைகளை தொடுத்தார்.

இதனால் வெகுண்டெழுந்த ஔடத உற்பத்தி கள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மற்றும் அரச தரப்பின் பின்வரிசை எம்.பி.க்கள் கடும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர். முஜிபுர் ரஹ்மான் எம்.பி. யை உரையாற்றவிடாது இடையூறுகளை ஏற்படுத்தினர். ஒழுங்குப்பிரச் சினைகளை எழுப்பியதுடன் ஒரு கட்டத்தில் ச பைக்கு நடுவே இறங்கவும் முயற்சித்தனர்.

எனினும் இவை தொடர்பில் அலட் டிக்கொள்ளாத முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தொடர்ந்தும் கொரோனா தடுப்பூசிகள் கொள்வனவில் மோசடி செய்யப்பட்ட பணம் எவ்வளவு?யார் யார் பங்கு போட் டீர்கள்? எனக் கேட்டு அரசை கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, கஞ்சிப் பானை இம்ரானுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு என்னவென விடயத்துக்கு பொருத் தமில்லாத கேள்வியை எழுப்பிய போது அரச தரப்பினர் 'கூ' அடித்து கூச்சலிட்டனர்.

இதற்கு பதிலளித்த முஜிபுர் ரஹ்மான் எம்.பி., உங்களுக்கு அப்படியானவர்கள் நண்பர்கள் என்பதனால்தான் இரவு நேரங்க ளில் சிறைச்சாலைகளுக்கு மது போதையில் செல்கின்றீர்கள், அநுராதபுரம் சிறைக்கு சென்று செய்த வேலை தெரியும்தானே என் றார். இதனையடுத்து இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை அமர்ந்து விட்டார்.

இவ்வாறு சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக முஜிபுர் ரஹ்மான் எம்.பி. யின் உரையால் ச பை அல்லோலகல்லோலப்பட்டது.

## பண்டிகைக்...

முன்பக்கத் தொடர்ச்சி...

செய்தியாளர் சந்திப்பின் போது, நத்தார் கொத்தனி ஏற்படுமென பண்டிகைக் காலத் தில் நாட்டை முடக்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது பதிலளித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

மீண்டும் நாட்டை மூடுவதற்காக அர சாங்கம் எதிர்பார்க்கவில்லை. மிகவும் வெற் றிகரமாக தடுப்பூசிகளை செலுத்தி மீண்டும் நாட்டை திறந்துள்ளோம். இதனூடாக நாட் டில் கொவிட் தொற்று முற்றாக கட்டுப்படுத் தப்பட்டுள்ளது என்று அர்த்தப்படாது.

எவ்வாறாயினும் நாட்டில் அனைவரும் பாதுகாக்கப்படும் வரையில் நாடு பாதுகாப் பாக இருக்கின்றது என்று கூற முடியாது. இதனால் எதிர்வரும் பண்டிகை காலத்தில் பொறுப்புடன் தமது பாதுகாப்பையும் தமது குடும்பத்தையும் பாதுகாக்கும் வகையில் சுகாதார ஒழுங்குவிதிகளை பின்பற்றி நடந் துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது ஒமிக்ரோன் வைரஸ் தொற்று வெளிநாடுகளில் பரவும் நிலையில் நாடு கள் பல தமது எல்லைகளை மூடியுள்ளன. மிகவும் ஆபத்தான நிலைமை உலகில் பரவி வருகின்றது என எச்சரிக்கைகள் விடுக் கப்படுகின்றன. இதனால் தடுப்பூசிகள் போடாது இருந்தால் அதனை போடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். பாதுகாப்பு இன்றி இருந்தால் நாடு மீண்டும் பிரச்சனைக்குள் செல்லும். நாட்டில் பொருளாதாரம் மற்றும் சுகாதார பாதுகாப்பு என்பன மக்களின் நடவ டிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

தற்போது சுகாதார தரப்பினரால் ஒழுங்கு விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. சுகாதார தரப்பின் கோரிக்கைகளையும் மீறி கடந்த காலங்களில் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் நடந்தன. அவ்வாறு மக்கள் ஒன்று கூடியது கவலைக்குரிய காரணமாகும்.

இதேவேளை நாட்டை மூடுவது தொடர் பாக இதுவரையில் உத்தியோகபூர்வமாக நாங்கள் கலந்துரையாடல்களை நடத்த வில்லை என்றார்.

## வடக்கு...

முன்பக்கத் தொடர்ச்சி...

தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இரா ஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அமைச் சரிடம் நேரடியாக கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

மாகாணசபைகளின் கீழிருந்த பல அதிகா ரங்கள் திட்டமிடப்பட்டு மத்திய அரசினால் பறிக்கப்படுகின்ற ,மீளப் பெறப்படுகின்ற ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட் டுள்ளது. குறிப்பாக மாகாண சபைகளுக்கி ருக்கின்ற நிதி,பொலிஸ் ,காணி அதிகாரங்கள் அரசியலமைப்பில் எழுத்து வடிவத்தில் .மட்டுமே உள்ளன .நடைமுறையில் அவை எல்லாம் மாகாண சபைகளிடமிருந்து பிடுங் கப்பட்டு மரத்துக்கு சேர்க்கப்பட்டுள்ளன.

அதேபோல்தான் மாவட்ட வைத்தியசா லைகளும் கடந்த ஆண்டிலிருந்து மாகாண ச பைகளிடமிருந்து பறிக்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்த நாட்டிலுள்ள 9 மாவட்ட பொது வைத்தியசா லைகளை மாகாணத்திலிருந்து பறித்தெடுத்து மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த 9 மாவட்ட பொது வைத்தியசாலை களில் மன்னார் ,வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிக்கின்ற செயற்பாட்டை மாற்றி யமைக்குமாறு அரசிடம் .சுகாதார அமைச்ச ரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேபோல் பாடசாலைகள் தேசிய பாட சாலைகள் என்ற இனிப்பு மூலாம் பூசப்பட்டு பல பாடசாலைகளை மத்திய அரசு உள்வாங் கியதையும் நான் நினைவு படுத்த விரும்பு கின்றேன். இவ்வாறான நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும் .மாகாணங்க ளுக்கு அதிகாரங்களை வழங்கிவிட்டு பின்னர் அவற்றி பறித்தெடுக்கின்ற செயற்பாட்டை அரசு முழுமையாக கைவிட வேண்டும்.

மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப் பட்ட வேண்டுமென்ற பல்வேறு தரப்பின ரின் கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்படு வது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை .

## அரசுக்குள்...

முன்பக்கத் தொடர்ச்சி...

அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே நிலவும் கருத்து முரண்பாட்டை அரசாங்கம் பிளவுப்பட்டுள்ளது என்று அர்த் தப்படாது என்றும், இதனை ஆரோக்கிய மான நிலைமையாகவே பார்க்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரான அமைச் சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், பொது ஜன பெரமுனவிற்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நிலவும் கருத்து மோதல்கள் தொடர் பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கூட்டணி அரசாங்கமுள்ள அனைத்து நாடுக ளிலும் இவ்வாறு முரண்பாடு ஏற்படும். நாம் 197077 காலத்தில் சமகி பெரமுன இருந்தது. அதன் பின்னரும் கூட்டணி அரசே இருந்தது. வரலாற்றில் 1956 அரசும் கூட்டணி அரசே .அன்றும் கருத்து முரண்பாடு இருந்தது. கட்சிகளிடையேயான கருத்துமுரண்பாடு ஆரோக்கியமான நிலைமையாகவே நோக்க வேண்டும். எமது அரசின் அமைச்சர் ஒருவ ருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கூட முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் அரசு பிரியவில்லை. அரசாங்கத்திற்குள் பல்வேறுபட்ட கருத்துக்கள் முரண்பாடுகள் ஏற்படுவது ஆரோக்கியமான போக்காகும்.

இந்திய இபிரித்தானிய கூட்டணி அரசுகளில் கூட இந்த நிலை உள்ளது. கூட்டணி என்பதே வேறுபட்ட கருத்துகளின் கூட்டணியாகும். எதிர்க்கட்சி என்பதும் பெரிய கூட்டணியாகும். அங்கும் மாறுபட்ட கருத்து இருக்கிறது. அதற் காக யாரும் எதிரணி பிரியப்போகிறது என்று சொல்வதில்லை. இது ஆரோக்கியமான ஜன நாயகத்தின் அடையாளம். அதனை விடுத்து இந்த நிலை கட்சிகளின் இறுதிக்கட்டம் என கருதக் கூடாது என்றார்.

## 'ஒமிக்ரோன்' திரிபை...

முன்பக்கத் தொடர்ச்சி...

இந்த வைரஸை இலங்கையில் எதிர் கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளனவென ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற் றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப் பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகை யில்,

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப் பட்டுள்ள ஒமிக்ரோன் கொரோனா திரிபு வைரஸ் 15 சர்வதேச நாடுகளில் பரவி வரு வதாக அறிய முடிகின்றது. இலங்கையில் அதனை எதிர்கொள்வதற்கு அனைத்து நடவ டிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன .

இத்திரிபு வைரஸ் பரவும் வேகம், அதனால் ஏற்படும் மரணங்கள், அதற்கு தடுப்பூசி ச ரத்தியமா?, பி.சி.ஆர். மூலம் அதனை இனங் கண்டுகொள்ள முடியுமா?அதற்கான நோய் அறிகுறிகள் என்ன? என்பது தொடர்பில் இது வரை உலக சுகாதார ஸ்தாபனம் தெளிவான விபரங்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

கொரோனா வைரஸ் உலக தொற்று என் பதால் அதில் எவ்வாறான புதிய திரிபுகள் வந்தாலும் அது உலக தொற்றாகவே நாம் கருதி செயற்பட வேண்டும். இதுவரை நாம் அதனை கட்டுப்படுத்துவதற்கு சாத்தியமான வகையில் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங் கியள்ளோம். எதிர்காலத்திலும் அதற்கான அனைத்து .இராஜாங்க அமைச்சர் தெரி வித்தார். ஒமிக்ரோன் திரிபு வைரஸ் பரவும் நாடுகளிலிருந்து சுற்றுலா பயணிகள் எமது நாட்டுக்கு வருவது கடந்த 28ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது..அதேவேளை கடந்த வாரங்களில் அவ்வாறு இலங்கைக்கு வந்துள்ளவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சர்வதேச அளவில் வரவேற்பை பெறும் வகையில் எமது நாட்டில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக் கப்பட்டுள்ளன. நாட்டில் இதுவரை எமது ச னத்தொகையில் 84 வீதமானோருக்கு தடுப் பூசி வழங்கப்பட்டுள்ளது.

அந்த நடவடிக்கைகளில் சுகாதாரத் துறை யினர் படையினர் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாடு முழுவதுமுள்ள ஆஸ்பத் திரிகள் ஒன்றிணைந்து திட்டமிட்டு செயற் பாடுகளை மேற்கொண்டமை தொடர்பில் நன்றி தெரிவிக்கின்றோம். உலக சுகாதார அமைப்பு, யுனிசெப் நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் எமது செயற்பா டுகளை பாராட்டியுள்ளன.

நாட்டின் கடந்த காலங்களில் அனைத்து அர சாங்கங்களும் இலவச சுகாதார சேவைக்காக பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன. எமது நாட்டைப் பொருத்தவரை இலவச சுகாதார சேவைகள் மிக சாத்தியமானதாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் 29% அம்புலன்ஸ்கள் நாடு முழு வதும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் நாட்டில் நாலரை மில்லிய னுக்கு மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர். அதனை மேலும் அதிகரிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படுகிறது. அந்த செயற்பாடுக ளுக்காக மேலும் 25 அம்புலன்ஸ் வண்டிகளை ஜனாதிபதி பெற்று தந்துள்ளார்.மேலும் 60 அம்புலன்ஸ் வண்டிகள் விரைவில் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன என்றார்.

## சிலிண்டர் வெடிப்பு...

முன்பக்கத் தொடர்ச்சி...

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள வீடுகள் மற்றும் விற்பனை நிலையங்களில் இருந்து பதிவாகிவரும் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு மற்றும் தீப்பற்றல் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் அவை தொடர்பில் உடன் எடுக்கப்பட வேண் டிய நடவடிக்கைகளை முன்வைப்பதற்கா கவும் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேரா சிரியர் சாந்த வல்பொல தலைமையிலான இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென் னகோன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஜித் டீ சில்வா, ஸ்ரீ ஜயவர் தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டபிள்யூ.டீ.டபிள்யூ.ஜயதிலக்க, பேராசிரி யர் பிரதீப் ஜயவீர, இலங்கை புத்துருவாக்க ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் நாராயன் ஸ்ரீமுத்து, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுதர்ஷன சே ாமசிறி, இலங்கைத்தர நிர்ணய நிறுவனத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் சுஜீவ மஹா கம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேவையான மற்றும் ஏற்கனவே உள்ள அனைத்து ஆய்வுகள் மற்றும் அனைத்துத் தரப் பினரதும் கருத்துக்களை ஆராய்ந்து, இரண்டு வாரங்களுக்குள் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கு மாறு, ஜனாதிபதி அவர்களினால் அக்குழுவின ருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

சிறு விளம்பரம்

தேவை

O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயது டைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன டியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகு ந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்க ளாக இருத்தல் வேண்டும். தொடர்புக ளுக்கு : 076 8974925, 077 1661476

# அமிர்தகழியில் வீடொன்றில் இருந்து எரிகாயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

## மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலையென சந்தேகம்

திருக்கோவில் , பட்டிருப்பு நிருபர்கள்

மட்டக்களப்பு அமிர்தகழி பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அமிர்தகழி ,ஆனந்தன் வீதியிலுள்ள வீடொன்றில் தனிமையிலிருந்த தியாகராஜா பத்திராஜன் என்னும்69 வயதுடையவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்ணெண்ணை ஊற்றப்பட்டு தீயிட்டு அவர் எரிந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



அவருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. நடக்க முடியாத நிலையில் தனிமையில் வாழ்ந்து வருவதாகவும் தனக்கு வாழ்கை வெறுத்துப் போயுள்ளது எனவும் கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டு நேற்றுக் காலை 9 மணியளவில் சமையலறை பகுதியில் தனக்கு தானே மண்எண்ணெய்யை ஊற்றி தீயிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

சம்பவ இடத்திற்கு வருகைதந்த மாவட்ட தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன் களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் வசம் இருந்த வெருகல் பிரதேச சபை கைமாறுமா?

## பொதுஜன பெரமுன வசம் செல்லும் சாத்தியம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

இலங்கை தமிழரசுக் கட்சி வசம் இருந்த வெருகல் பிரதேசசபை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வசம் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சி வசமிருந்த திருகோணமலை வெருகல் பிரதேச சபையின்2022 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வெருகல் பிரதேச சபையின் 2022 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் திங்கட்கிழமை , இலங்கைதமிழரசுக் கட்சியின் உறுப்பினரும் சபையின் தவிசாளருமான க.சுந்தரலிங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 6 உறுப்பினர்களும் எதிராக 7 உறுப்பினர்களும் வாக்களித்த நிலையில் மேலதிக ஒரு வாக்கினால் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

வெருகல்பிரதேசத்தில் ஆட்சி அதிகாரம் இலங்கை தமிழரசு கட்சியின் வசம் இருந்த போதிலும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது வாக்கெடுப்பின் போதும் தற்போது தோற்கடிக்கப்பட்டு தமிழரசு கட்சியின் அதிகாரங்கள் இல்லாமல் போயுள்ளது.

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினை தோற்கடித்த இந்த சூழ்நிலையில் எம்மோடு இணைந்து கைகோர்த்து பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன் வாருங்கள் என்று வெருகல் பிரதேசசபை உறுப்பினர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

# பதுளையில் வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்தது



பதுளை நிருபர்

பதுளைப் தொடங்வத்தை பகுதியில் வீடொன்றில் எரிவாயு அடுப்பில் சமைத்துக் கொண்டிருந்த வேளையில் அவ் அடுப்பு பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறிய சம்பவமொன்று,நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.

இவ் வெடிப்பு சம்பவத்தில் எவரும் காயங்களுக்குள்ளாகவில்லை. சமையலறையில் மட்டும் சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.

பொலிசார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# எம்பிலிப்பிட்டியில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது

மற்றுமொரு எரிவாயு வெடிப்பு சம்பவம் எம்பிலிப்பிட்டியில் பதிவாகியுள்ளது.

எம்பிலிப்பிட்டி, கதுருகஸ் ஆர சந்தியில் உள்ள கடை ஒன்றின் பின்புறத்தில் உள்ள, கடை உரிமையாளரின்வீட்டின் சமையலறையில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

29 ஆம் திகதி மாலை இவ் வெடிப்பு ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

43 வயதான வீட்டு உரிமையாளர் மொஹமிதிரமிகே இத்திக, நேற்று முன்தினம் மாலை தண்ணீர் கொதிக்க வைப்பதற்காக எரிவாயு அடுப்பை மூட்டிவிட்டு தண்ணீர் வைத்துவிட்டு வரவேற்பறையில் இருந்தபோது, சிறிது நேரத்தில் பலத்த சத்தம் கேட்டதாகவும், சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டதாகவும் , உடனடியாக தீ பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் சமையல் எரிவாயு அடுப்பின் பாகங்கள் வெடித்துச் சிதறியதைப் பார்த்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்தில் எவரும் இல்லாததால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. சத்தம் கேட்டதால் தீயை அணைத்ததாகவும் அவ்வாறு இல்லாவிட்டால் பெரும் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் எம்பிலிப்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# இழுவைமடி தடைச் சட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்தல்

## வடக்கில் இன்று கையெழுத்து போராட்டம்

றொசான் நாகலிங்கம்

இழுவைமடி தடைச் சட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுத்தி வடக்கில் கையெழுத்து போராட்டத்தை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இன்று புதன்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.

இன்றைய போராட்டம் கிளிநொச்சியில் பூநகரில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் தேசிய அமைப்பாளர் அன்டனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இழுவைமடிச் சட்டத்தை அமுல்படுத்துமாறு அரசாங்கத்துக்கு வகையில் வடக்கில் கையெழுத்து வேட்டை போராட்டத்தை இன்று முதலாம் திகதி முதல் எதிர்வரும் நான்காம் திகதிவரை முன்னெடுக்கவுள்ளோம். இதன் ஆரம்ப நிகழ்வு பூநகரியில் காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது. இப் போராட்டம் நாளை வியாழக்கிழமை மன்னாரிலும், நாளை மறுதினம் முல்லைத்தீவிலும் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கவுள்ளோம்.

எம்மால் முன்னெடுக்கவுள்ள போராட்டத்தின் போது பத்தாயிரம் கையெழுத்துக்களை பெற எதிர்பார்த்துள்ளோம்.

இழுவைமடிச் சட்டத்தை அமுல்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான மகஜரில் பெறப்படும் கையெழுத்துக்கள் அடங்கிய பிரதிகள் ஜனாதிபதி, கடற்தொழில் அமைச்சர் மற்றும் சட்டமாதிபருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

அத்துடன் இதனைக் கொண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்யவுள்ளோம் என்றார்.

# இலங்கை பட்டய ஊடகவியலாளர்கள் நிறுவன நடவடிக்கைக் குழு நியமனம்

## செந்தில்வேலவர் உள்ளிட்ட 13 பேர் தெரிவு

ஊடக கல்வித்துறையில் சான்றிதழ் பாடநெறி தொடக்கம் முதுகலை பட்டம் வரையான கல்வியை கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் ஊடக உயர்கல்வி ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனமாக இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்காக ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்த யோசனைக்கு கடந்த அக்டோபர் 5ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அந்த யோசனையை செயல்படுத்தும் நோக்கில் ஊடக அமைச்சு இலங்கை பட்டய ஊடக நிறுவனம் ஒன்றைஅமைக்கபொறுப்பு வாய்ந்த நடவடிக்கை குழுவொன்றை நியமித்துள்ளது. சர்வதேச தரத்துக்கு அமைய தரமான ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதும் மற்றும்உயர்தொழில்



நிபுணத்துவதுடன் கூடிய ஊடகவியலாளர்களை உருவாக்குவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அக்குழுவின் அங்கத்தவர்களாக ஊடக அமைச்சின் செயலாளர்ஜகத்பி.விஜயவீர, ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் எச். ஹேவகே,அரசாங்க தகவல் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ச,ஊடக அமைச்சின் சட்ட அதிகாரி யுரேகா வேலாரத்ன , களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விஜயானந்த ரூபசிங்க,இலங்கை திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மதுஷானி கலகெதர, இலங்கை மன்ற சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விஜயந்த உக்வத்த, முன்னாள் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ரங்க ஜயசூரிய, இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்க தலைவர் அசங்க ஜெயசூரிய, இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் பேரவை பிரதிச் செயலாளர் மொஹான் வாம்பியதாச,தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தேவதாசன் செந்தில்வேலவர்,சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் விஞ்ஞானத்துறை எழுத்தாளர் நாலக்க ஜே. குணவர்தன மற்றும் குழுவின் செயலாளர் டபிள்யூ .பி. செல்வந்தி(பணிப்பாளர் , அபிவிருத்தி) ஆகியோர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகம்

## முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன

பா. கிருபாகரன்.
ந. ஜெயகாந்தன்

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகம் என முன்னாள் சுகாதார அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யுமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சுக்கன் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா வைரஸ் ஒழிப்பு தொடர்பில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகின்றன.இந்தியாவைப் போன்று நாம் பெரிய நாடு அல்ல. இந்தியாவோடு ஒப்பிடுகையில் எமது நாட்டில் மரண எண்ணிக்கை அதிகம்.

ஒரு நாட்டில் ஒரு மில்லியன் பேருக்கு எத்தனை பேர் கொரோனா தொற்று காரணமாக மரணம் அடைந்துள்ளனர் என பார்க்கும் போது எமது நாட்டில் ஒரு மில்லியன் பேருக்கு 664 பேர் கொரோனாவால் மரணமடைந்துள்ளனர். அந்தத் தொகை இந்தியாவில் 334 ஆகவும் மாலைதீவில் 442 ஆகவும் ஆப்கானிஸ்தானில் 182 ஆகவும் பங்களாதேஷில் 160 ஆகவும் பாகிஸ்தானில் 126 ஆகவும் காணப்படுகிறது.

அந்தவகையில் ஏனைய நாடுகளை விட இந்தியாவை விடவும் எமது நாட்டில் அதிகமானோர் கொரோனா வைரஸினால் மரணமடைந்துள்ளனர். கொரோனா தடுப்பூசிகளை தாமதிக்காது பெற்றுக்கொடுத்திருந்தால் கொரோனா மரணங்களை எமது நாட்டில் குறைத்திருக்க முடியும்.

எமது நாட்டில் சுகாதாரத்துறை அரசியல் கண்ணாடி கொண்டே பார்க்கப்படுகிறது.ஆளும் கட்சி பதவியில் உள்ளகாலத்தில் எதிர்க்கட்சி அதுபற்றி விமர்சிப்பதும் எதிர்க்கட்சி பதவியில் உள்ள காலத்தில் ஆளும் கட்சி அது பற்றி விமர்சிப்பதுமே இடம்பெறுகிறது என்றார்.



இந்திய கலாசாரம் மற்றும் ஜனநாயகம் குறித்து தற்போது இந்தியாவில் நடைபெற்று கொண்டிருக்கும் மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க, குஜராத் மாநில கலாசார மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஸ்ரீ ஹர்ஸ் சங்கர்வி வீயை நேற்று காலை குஜராத்தில் கவேலி காந்திநகரில் உள்ள ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடிய போது .....

# பாணின் நிறையைக் குறைத்தால் விலையைக் குறைக்க முடியும்

## பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் கூறுகிறது

க.பிரசன்னா

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டமையினால் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தினால் பாணின் எடையினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் பாணின் விலையினை குறைக்க முடியுமென அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாணின் அனுமதிக்கப்பட்ட எடையினை குறைப்பதற்கு அரசாங்கத்துக்கு பரிந்துரைக்கும் அதேவேளை பாணின் எடையை குறைப்பதன் மூலம் விலையினை குறைக்க முடியுமெனவும் எனவே அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாணின் எடையை 400 கிராமாக குறைக்குமாறு பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது ஒரு பாணின் சராசரி எடை 450 கிராம். எவ்வாறாயினும், அங்கீகரிக்கப்பட்ட எடையை விட 400 மற்றும் 300 கிராமுக்கும் குறைவான எடையுள்ள பாணினை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் போக்கு ஒவ்வொரு பகுதியிலும் அதிகரித்து வருகின்றது. இது சட்டவிரோதமான நடவடிக்கையாகும். எனவே அரசாங்கம் பாணின் எடையினை 400 கிராமாக குறைப்பதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாயின் விலையினை 5 - 10 ரூபாவினால் குறைக்க முடியுமென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பாண் ஒன்றின் விலையை 10 ரூபாவினாலும் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை 5 ரூபாவினாலும் அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும் பேக்கரி பொருட்களின் விற்பனை குறைந்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கோதுமை மா இறக்குமதி செய்யும் இரண்டு நிறுவனங்களும் ஏற்கனவே அறிவித்துள்ளன. ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 17.50 ரூபாவினால் அதிகரிப்பதாக பிரிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

# நான்காவது சடலம் நேற்று யாழில் கரையொதுங்கியது

## இறந்தோர் யார்? மர்மம் தொடர்கிறது

யாழ்ப்பாணம் கடற்கரையோர பகுதிகளில் அடுத்தடுத்து மனித சடலங்கள் கரையொதுக்கி வரும் நிலையில் இவர்கள் யார்? எங்கே, எப்போது, எவ்வாறு இறந்தார்கள்? என்பது குறித்த தகவல் இன்றி மர்மம் நீடிக்கிறது.

கடந்த 4 நாட்களில் வடமராட்சி கிழக்கு மணல்காடு, வல்வெட்டித்துறை, ஆகிய பகுதிகளில் 3 சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் நேற்று மேலும் ஒரு சடலம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் கரை ஒதுங்கியது. நேற்று கரையொதுங்கிய சடலம் பெரும்பாலும் உருக்குலைந்து காணப்பட்டது. இவ்வாறு கரையொதுங்கிய நான்கு சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

வழக்கமாக இந்திய, இலங்கை மீனவர்கள் இலங்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களில் சிக்கி காணாமல் போன பின்னர் இவ்வாறு சடலங்களாக யாழ். கடலோர பகுதகளில் கரையொதுங்குவது வழமை. எனினும் இவ்வாறான சம்பவங்கள் கடந்த வாரத்தில் இடம்பெற்றதாக தகவல்கள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
இல:185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
daily@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk
புதன்கிழமை 01 டிசம்பர் 2021 Wednesday 01st December 2021

## மீண்டும் உலகை கிலி கொள்ளவைக்கும் கொரோனாவின் ஐந்தாவது உருத்திரிபு

புதிதாக கண்டறியப்பட்ட கோவிட் - 19 இன் உருத்திரிபான ஒமிக்ரோன் நாட்டிற்குள் நுழைவது தவிர்க்க முடியாததென்று இலங்கை மருத்துவ சங்கம் உட்பட சுகாதாரத்துறை சார்ந்த சங்கங்களும் அமைப்புகளும் எச்சரித்துள்ளன .புதிய உருத்திரிபு நாட்டிற்குள் நுழையாமல் இருப்பதை உறுதிப்படுத்த அதிகாரிகள் ஏற்கனவே மேற்கொண்டது போன்று சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் பத்மா குணரத்ன கூறியுள்ளார் .'புதிய உருத்திரிபின் பிரவேசம் தாமதமாகலாம் என்றாலும், அது ஒருபோதும் நாட்டிற்குள் நுழையாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்று நாங்கள் கருதுகிறோம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார் .இதேவேளை, புதிய உருத்திரிபுகள் நாட்டிற்குள் நுழையக்கூடிய பல துவாரங்கள் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்திருப்பதுடன் ,விமான நிலையத்தில் உள்ள முறைமை மிகவும் பலவீனமாக உள்ளதாகவும் , சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த பின் சுகாதார அதிகாரிகளைத் தவிர்க்கலாமெனவும் அதிகாரிகள் இதில் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் உருத்திரிபு உலக நாடுகளை மீண்டும் கிலிகொள்ள வைத்துள்ளது. புதிய உருத்திரிபு அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.இதனால் நாட்டுக்கு கடுமையான சுகாதார ரீதியான தாக்கங்கள் ஏற்படுமென தெரிவிக்கப்படுகிறது. கொரோனா வைரஸின் இந்த உருத்திரிபு அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் சில தொடர்புடையவை. உலக சுகாதார அமைப்பு பி .1.1.529 மாறுபாடு அல்லது ஒமிக்ரோனை சார்ஸ் -சி ஓவி -2 என்று வகைப்படுத்தியதுடன் .இது ஏனைய வகை கொரோனா வைரஸ்களைக் காட்டிலும் விரைவாக பரவக்கூடும் என்று கூறியிருந்தது .ஒமிக்ரோன் என்று பெயரிடப்பட்ட புதிய உருத்திரிபை 'கவலையின் உருத்திரிபு ' என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்திருக்கிறது. ஒமிக்ரோனின் பரவல் தென்னாபிரிக்கா,பொட்ஸ்வானா, பெல்ஜியம், ஹொங்கொங் மற்றும் இஸ்ரேலிலும் பதிவாகியுள்ளது. இந்த உருத்திரிபு ஐரோப்பாவிலும் கண்டுபிடிக்கப்படுகிறது. பிரிட்டன் இரண்டு தொற்றுகள் தொடர்பாக பதிவு செய்துள்ளது . இது அதிகரிப்புக்கு வழிவகுக்குமா என்பது குறித்து விஞ்ஞானிகளுக்குத் தெரியாது. ஆனால் இது அதிக மீள் தொற்று அபாயத்தைக் கொண்டுள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒமிக்ரோன் தொடர்பான உலக சுகாதார அமைப்பின் பிரகடனத்திற்குப் பிறகு, பல்வேறு நாடுகள் கடந்த வார இறுதியில் பயணக் கட்டுப்பாடுகளை அறிவித்திருந்தன.அத்துடன் இந்த உருத்திரிபிற்கு தடுப்பூசிகள் பாதுகாப்பாக உள்ளதா என்பதைப் பார்க்க ஆய்வுகளும்மேற்கொள்ளப்படுகின்றன. டெல்டா உருத்திரிபு உலகளவில் கொரோனாவின் மிகவும் ஆதிக்கமுள்ள உருத்திரிபு என்று கூறப்பட்ட நிலையில், தொற்று வீதத்தில் ஒமிக்ரோன் டெல்டா உருத்திரிபை விஞ்சிவிடும் என்று அஞ்சப்படுகிறது. அதேவேளை உருத்திரிபால் ஏற்படும் நோயின் வகையை வரையறுத்து, அது உண்மையில் எவ்வளவுக்கு கடுமையானது என்பதைத் தீர்மானிக்க இன்னும் பல வாரங்கள் ஆகலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தற்போதைய சூழ்நிலையில், கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் புதிய உருத்திரிபை தாங்குமா என்ற மிகப்பெரிய கேள்வி எழுகிறது. அதேநரத்தில்,முன்பு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒமிக்ரோன் நோய்த் தொற்றிலிருந்து தப்புவதற்கான நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்களா என்பது மற்றொரு கேள்வி .ஏனைய கொரோனா வைரஸ் உருத்திரிபுகளுடன் ஒப்பிடும்போது ஒமிக்ரோன் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பாதிப்பை ஏற்படுத்துமா என்பது பற்றி நிபுணர்களுக்கு இன்னும் தெரியவில்லை.

இதற்கிடையில், புதிய மாறுபாடு கண்டறியப்பட்ட பிறகு, தென்னாபிரிக்காவில் இருந்து பயணத்தை நிறுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. தென்னாபிரிக்கா மற்றும் அண்டை நாடுகளில் இருந்து பயணம் செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்த தொற்றுநோய் இன்னும் வெகு தொலைவில் உள்ளது . உலகின் பிற பகுதிகளில் வைரஸின் பரவலை எதிர்த்துப் போராட வளர்ந்த நாடுகள் அதிகம் செய்ய வேண்டும் என்பதற்கான எச்சரிக்கையாகவும் இது தோன்றுகிறது .அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் பாதுகாப்பாக இருக்க, தனியாட்கள் எதிர்வரும் நாட்களில் பயண முடிவுகளை எடுப்பதற்கு முன், கோவிட் நோயால் ஏற்படக்கூடிய தங்கள் சொந்த பாதிப்பை மதிப்பீடு செய்ய வேண்டும். கொரோனா வைரஸின் ஐந்தாவது உருத்திரிபான ஒமிக்ரோனுக்கு எதிரான செயல்திறன் பற்றிய கேள்விகள் இருந்தபோதிலும் தடுப்பூசியே முதன்மையானதாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். ஏனெனில் அவை இன்னும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பாதுகாப்பாக இருக்கும். வயதானவர்கள் , தொற்றாநோய் உள்ளவர்களைப் பாதுகாக்க தடுப்பூசி மிகவும் முக்கியமானது. இரண்டு குழுக்களும் முழுமையாக தடுப்பூசி போடப்படாவிட்டால், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கும் மரணமடைவதற்குமான அதிக ஆபத்து உள்ளதென்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றமை கவலைக்குரிய விடயம். என்னவெனில் பல உருத்திரிபுகள் ,அவற்றின் வேகமாகப் பரவும் தன்மையால் தடுப்பூசிகளுக்கு எதிர்ப்பைக் குறைக்கின்றன.அனைவரும் தொடர்ந்து முகக் கவசங்களை அணிய வேண்டும், கூட்டத்தைத் தவிர்க்க வேண்டும், காற்றோட்டமான இடத்தில் தங்க வேண்டும், கைகளை கழுவ வேண்டும், ஏனைய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.இவையே எம்முன்னால் உள்ள சாத்தியமான தீர்வு.

# "எமது கிராமத்துக்கு எம்மால் செல்ல முடியாதுள்ளதே ..."



மீரா ஸ்ரீநிவாசன்

யாழ். குடாநாட்டின் கிழக்கு முனையில் அமைந்துள்ள கண்டிக்குளம் கிராமத்தின் விவசாயிகள் அசாதாரணமான சவாலை எதிர்கொண்டுள்ளனர்.

சமீபகாலமாககாய்கறிகளை பயிரிட்ட அவர்களது நிலங்களுக்கு செல்ல முடியாமல் தவிக்கின்றனர். வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் எல்லைக் கற்கள் எங்களின் காணிகளில் முளைத்துள்ளன என்று அங்கு வசிக்கும்எஸ்..அருந்தவராஜா என்பவர் 'டி.டபிள்யூ.சி. ' என்ற எழுத்துகள் வரையப்பட்ட பழுப்பான சாம்பல் நிறக் கல்லை சுட்டிக்காட்டினார். 'எங்கள் நிலங்களில் இது போன்ற ஒரு கல் போடப்பட்டால், அது அரசாங்கத்தின் வளப் பாதுகாப்பு முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதிக்குள் நுழைய வேண்டாம் என்று எங்களுக்கு கூறப்பட்டுள்ளது 'என்று அவர் தெரிவித்தார் .

இலங்கையில்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் ஒரு பரவலான கவலையின் மற்றொரு பிரதிபலிப்பே அவரது பிரச்சினையாகும். ஒருபுறம், இலங்கையின் போருக்குப் பின்னரான தசாப்தத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் இராணுவத்தின் வசம் இருந்தபொது மக்களின் காணிகளை மீள வழங்கியதற்கான பதிவுகளைக் காட்டுகின்றன. மறுபுறம், பல ஆண்டுகளாக போர்க்கால இடப்பெயர்வைத் தொடர்ந்து தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிய ஏராளமான குடும்பங்கள், அரசாங்கத்தின் தொல்லியல் மற்றும் வனவளத் திணைக்களத்திடமிருந்து தங்கள் நிலம் தொடர்பாக எதிர்கொள்ளும் மிக சமீபத்திய அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டுகின்றன. கடந்த ஆண்டு, கிழக்கு மாகாணத்தில் விவசாயிகள் ஒரு முறை பயிரிட்ட அல்லது தங்கள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிட்டுகளாகப் பயன்படுத்திய தங்கள் நிலங்களை மீட்டெடுக்க அதிகாரிகளுக்கு சவால்விடுத்து குறைந்தது ஒரு டஜன் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர் .

### ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகள்

யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஒரு மணித்தியாலப் பயணத்தூரத்திலுள்ளது கண்டிக்குளம் கிராமம் . கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லையில் உள்ள கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 250 குடும்பங்கள் வசிக்கின்றன ..அவர்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வாழ்கின்றனர். உள்நாட்டுப் போரின் போது, அவர்கள் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்தனர். சில குடியிருப்பாளர்கள் அயல் மாவட்டத்திற்கு நடந்துசென்றதை நினைவுகூர்ந்தனர் . மேலும் 2009 மற்றும் 2011 இல் தங்கள் கிராமத்திற்கு படிப்படியாகத் திரும்பினர். நாங்கள் திரும்பி வந்தபோது, இங்கு எதுவும் இல்லை .எங்கள் வீடுகள் அழிக்கப்பட்டிருந்தன. இப்போது, அரசாங்கம் எங்களின் பூர்வீக நிலங்களை 'வனவிலங்கு பாது காப்புப் பகுதிகள்'என்று பிரகடனப்படுத்தியுள்ளது என்று சமூகத் தலைவர் நடேசா யோகராஜா கூறினார்.

எங்கள் கிராமத்திலும் அதிக இராணுவ பிரசன்னம் உள்ளது, நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஊடகங்களிடம் பேசினால் கூட சி.ஐ.டி. எங்களை விசாரிக்கும் சாத்தியம் உள்ளது என்று அவர் கூறினார் . வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் பல இராணுவ சோதனைச் சாவடிகள் உள்ளதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகத்தைத் தடுப்பதற்காகத்தான் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு நாளும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைப்பற்றப்படும் பெருமளவானவற்றைப் பற்றி நாம் படிக்கி



றோம். அதற்குள்ள அர்த்தம்? இவ்வளவு கண்காணிப்பு இருந்தும் போதைப்பொருள் எப்படி நம் நாட்டிற்குள் நுழைகிறது? என்று வடக்கின் பல கரையோரப் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் நிலைத்திருப்பதற்கான அரசாங்கத்தின் நியாயப்பாட்டை குறிப்பிட்டு அவர் கேட்டார்.

வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் கூறுகையில்,

பல குடும்பங்கள் தனியார் காணிக்கான உரிமைப்பத்திரம் வைத்திருந்ததாகவும், மேலும் சிலர் பல தசாப்தங்களாக அரச காணியில் விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். 'யுத்தம் முடிவடைந்தவுடன், அரசாங்கம் இந்த நிலங்களை பாதுகாப்பிற்காகஒதுக்கப்பட்ட பகுதிகளாகவர்த்தமானியில் வெளியிடத் தொடங்கியது' என்று அவர் கூறினார். இந்தப் பிரச்சினை, பல ஆண்டுகளாக அரசாங்கங்கள் முழுவதும் நீடிக்கிறது. அதிகாரிகள் அந்தப் பகுதிகளை நேரில் ஆய்வு செய்யவில்லை அல்லது வனவிலங்கு காப்பகப் பகுதிகளாக அறிவிப்பதற்கு முன் பல தலைமுறைகளாக இங்கு வசிக்கும் மக்களுடன் ஆலோசனை நடத்தவில்லை. வடக்கு, கிழக்கெங்கும் இதே கதைதான் என்று அவர் குறிப்பிட்டார்.

'வனத் திணைக்களம் நூற்றுக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகளை அல்லது மக்களின் அனுமதிப்பத்திர காணிகளை பாதுகாப்பு பிரதேசங்களாக அறிவித்து வருகின்றது' என்று அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேன் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார். அரச காணிகள் மீள் ஒதுக்கீடு செய்யப்படுமையின், வடக்கு மற்றும் கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதற்காக, அது பெரும்பாலும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த உண்மைகளை நாம் கூறும்போது, நாங்கள் இனவாதிகள் அல்லது அல்லது சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மக்களை வெளியில் உள்ள மக்களின் நன்மைக்காக ஏழைகளாக்க முடியாது என அவர் சபையில் தெரிவித்திருந்தார்

### சர்ச்சைக்குரிய பகுதிகள்

இலங்கையின் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் 2018 செயற்பாட்டு அறிக்கையின்படி, முன்னர் பறவைகள் சரணாலயமாக இருந்தகண்டிக்குளத்தில் சுமார் 50,000 ஏக்கர் நிலம் 2015 இல்தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்பட்டது. குடியிருப்பாளர்கள் முன்னைய சிறிசேன –விக்கிரமசிங்க நிர்வாகத்திடம் இந்த விடயம் தொடர்பாக கவனத்திற்கு கொண்டுசென்றிருந்தனர். ஆனால் பயனில்லை.

இது தொடர்பாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டாரவை தொடர்பு கொண்டு கேட்ட போது,

கண்டிக்குளம் மக்களின் கவலைகள் குறித்து தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார். இப்பகுதி தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்பட்ட போது, ஆட்கள் வசிக்கும் இடங்கள் பல விலக்கப்பட்டதாக அவர் கூறினார். ஆனால் சில சர்ச்சைக்குரிய பகுதிகள் உள்ளன.

எங்கள் பாதுகாப்புத் திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக நாங்கள் கள ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் தொற்றுநோய் காரணமாக நாங்கள் அதை ஒத்திவைக்க வேண்டியிருந்தது என்று அவர் இந்துவிடம் கூறினார். விரைவில் உள்ளூர் மக்களிடம் கலந்து பேசி பிரச்சினைக்கு தீர்வு காண்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.யோகலட்சுமி (62 வயது) போன்ற குடியிருப்பாளர்களுக்கு, அவரின் தந்தையும் தாத்தாவும் விவசாயம் செய்துகொண்டிருந்ததைப் பார்த்து வளர்ந்த நிலம் , திடீரென்று அவருடைய குடும்பத்திற்கு இல்லாமல் போனது என்பது குழப்பமாக இருக்கிறது. 'பாருங்கள் , எங்களிடம் எல்லா ஆவணங்களும் உள்ளன' என்று அவர் தனது வெளிர்–மஞ்சள் நிற காணி உரிமைப்பத்திரத்துடன் ஒரு கோப்பைத் திறந்தார் .

நடேசா யோகராஜாவின் கூற்றுப்படி,

சமீபத்திய நகர்வுகள் கிராமத்தின் உணவு உற்பத்திக்கும் அச்சுறுத்தலாகவுள்ளன . எங்கள் நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதித்தால், ஒட்டுமொத்த கிராமமும் தன்னிறைவு பெறும். சட்டவிரோதமாக வேட்டையாடினால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கட்டும். இத்தனை வருடங்களில் இந்த வாழ்விடத்தில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளை எம் மக்கள் ஒருபோதும் துன்புறுத்தியதில்லை. நாங்கள் ஒன்றாக வாழ்ந்தோம் என்று அவர் கூறியுள்ளார் .

கிராம மக்கள் கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிராகவோ அல்லது இனப் பிரச்சினைகளை முன்னிறுத்தி சில ஆர்ப்பாட்டங்களின் ஓரங்கமாகவோ இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். 'நாங்கள் இங்கே எங்கள் வாழ்வாதாரத்திற்காக போராடுகிறோம் ' என்று அவர் தனது இருசக்கர வாகனத்தை செயற்கைக் காலால் உந்தி –இயக்கினார் . மாகாணத்தில் உள்ள பலரைப் போலவே, அவர் போர்க்கால ஷெல் தாக்குதலில் கடுமையாக காயமடைந்திருந்தார்.

இந்து

> வனவிலங்கு பூங்காவிற்கான பரப்பளவை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தன்னிச்சையாக விரிவாக்கியதன் மூலம் வடபகுதி கிராமமான சுண்டிக்குளத்தில் வசிப்பவர்கள் பாரம்பரிய விவசாய நிலங்களை இழந்துள்ளனர்



# கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று வரையிலும் சகல வளங்களுடனும் 5 ஆதார வைத்தியசாலைகள்

## கிராமப்புற வைத்தியசாலைகள் புறக்கணிப்பு -கலையரசன் எம்.பி.

பா. கிருபாகரன்- ந. ஜெயகாந்தன்

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று வரையிலும் இருக்கின்ற பகுதி களிலே 5 ஆதார வைத்தியசாலைகள் உருவாக்கப்பட்டு சகல வளங்களும் குறிக்கப்பட்ட தூரத்துக்குள்ளே குவிக்கப்படுகின்ற நிலைமையில் கிராமப்புற வைத்தியசாலைகள் புறக்கணிக்கப்படுவதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.யான தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சுக்கன நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இன்ரா மெடிக்கல் ஒபிசருக்குரிய அனுமதியை சுகாதார அமைச்சர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முதலாவதாக முன்வைக்கின்றேன். இதற்குரிய கட்டிடங்களும் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளதால் இந்த அனுமதியை வழங்கி அங்குள்ள சுகாதார துறையை மேம்படுத்த வேண்டும். அடுத்ததாக கிளிநொச்சி மாவட்டத்திலே பல வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டியுள்ளன. அந்த அடிப்படையில் தர்மபுரம் வைத்தியசாலை, பளை வைத்தியசாலை, பூநகரி வைத்தியசாலை, வேரவில் வைத்தியசாலை போன்றவை தரமுயர்த்தப்பட வேண்டும்.

ஏ9 வீதியிலே தற்போது அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலையில் அங்கு அவசர விபத்து . சேவைப்பிரிவொன்று அமைக்கப்படவில்லை. எனவே அதனை விரைவாக அமைக்க வேண்டும்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சுகாதார துறை மேலோங்கி நிற்கின்றது. அந்த வகையில் மருத்துவர்கள்,தாதியர்கள் ,சுகாதார பிரிவினர் மற்றும் அமைச்சருக்கு நாம் நன்றி கூறுபவர்களாக இருந்தாலும் 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை பார்க்கின்றபோது 153 .536 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது .2021 இல் 159.48 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. கடந்த காலத்தை விட குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு பிராந்திய சுகாதார பணிமனைகள் உள்ளன. ஒன்று அம்பாறையில் சிங்கள மக்களை மையமாக வைத்தும் அடுத்தது தமிழ் முஸ்லிம்களை மையமாக வைத்து கல்முனையிலும் இயங்கி வருகின்றன. ஆனால் இந்த பணிமனைகள் 2017 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் மிக மோசமான பணிகளைத்தான் செய்தன. குறிப்பாக கல்முனையை மையமாக வைத்து இயங்கிய சுகாதார பணிமனை யில் பாரிய அரசியல் தலையீடுகள் இருந்ததன் காரணமாக தமிழ் பிரதேசங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டன.

கல்முனை, திருக்கோவில் , அம்பாறை என்ற மூன்று வைத்தியசாலைகளும் பழைமையான வைத்தியசாலைகள், ஆனால் திருக்கோவில் வைத்தியசாலை என்பது 2017 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டு அடிக்கல் நாட்டு விழா எல்லாம் நடைபெற்றன. ஆனால் அதற்கான அபிவிருத்தி பணிகள் இன்றுவரை முன்னெடுக்கப்படவில்லை. வைத்தியதிகாரிகளை நியமித்துள்ளமைக்கு அமைச்சருக்கு நன்றி கூறுகின்றேன்.

கல்முனை சுகாதார வைத்திய பணிமனை என்கின்றபோது கூடுதலாக நகர்ப்புறங்களை அண்டிய அபிவிருத்தியே முன்னெடுக்கப்பட்டது. கிராமப்புறங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டிருந்தன. அங்குள்ள மக்கள் வைத்தியசாலைகளை தரமுயர்த்திடுமாறு கோரிய போதும் அங்குள்ள அரசியல்வாதிகளினாலும் அதிகாரிகளினால் அது தட்டிக்கழிக்கப்பட்டது. நான் மாகாணசபையில் இருந்த போது பல தடவைகள் அந்த வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டுமென்ற பிரேரணையை முன்வைத்தபோதும் நிராகரிக்கப்பட்டன. ஏனெனில் அந்த பிரதேசங்கள் குடியேற்ற கிராமங்களாக இருப்பதல்ல ஆரம்ப வைத்தியசாலைகளாகவே உள்ளன.

இந்த அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு 3 வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. பனங்காடு வைத்தியசாலை,எல்லைக்கிராமத்தில் இருக்கின்ற மல்வத்தை வைத்தியசாலை ,அன்னமலை வைத்தியசாலை என்பனவே பிரதேச வைத்தியசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. இதற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். தரமுயர்த்தலோடு அதற்கான வளங்களும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். கிராம மக்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு போவதென்றால் பெருமளவு பணத்தை போக்குவரத்துக்கே செலவிட வேண்டியுள்ளது.

பொத்துவிலில் கோமாரி வைத்தியசாலை குறுகிய வட்டத்துக்குள் உள்ளது. அங்குள்ள மக்கள் இதனால் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவிக்கின்றனர். மத்திய முகாம் சொறிக்கல்முனை வைத்தியசாலைகள் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும். எமது பிரதேசங்கள் மிகவும் வறிய பிரதேசங்கள் என்பதனால் அங்கு வைத்திய சேவைகளை மேம்படுத்த வேண்டும்

கல்முனை சுகாதார பணிமனை பரந்துபட்ட பிரதேசமாக உள்ளது. இருந்தாலும் 25 கிலோ மீற்றருக்குட்பட்ட பிரதேசங்களை நாம் பார்க்கின்றபோது குறிப்பாக கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று வரையிலுமாக இருக்கின்ற பகுதிகளை நாம் பார்க்கின்ற போது அந்த இடங்களிலே 5 ஆதார வைத்தியசாலைகள் உருவாக்கப்பட்டு சகல வளங்களும் குறிக்கப்பட்ட தூரத்துக்குள்ளே குவிக்கப்படுகின்ற நிலைமை உள்ளது. இதனை பார்க்கின் போது நகரங்களை அண்டிய அபிவிருத்தியும் கிராமங்களை புறக்கணிக்கின்ற நிலையும் உள்ளது. இந்த நிலைமை மாற வேண்டும். இதே நிலையே கரடியனாறு ,நாவிதன்வெளி போன்ற இடங்களிலும் உள்ளன என்றார்.

# மலையகத் தோட்டங்களில் தமிழ் பேசும் குடும்பநல உத்தியோகத்தர்களை நியமிக்கவும்

## பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

தேசிய சுகாதார சேவையை மலையக தோட்டங்களுக்கு விஸ்தரிக்கவும், அங்கு மொழிப் பிரச்சனையை எதிர்நோக்கும் கர்ப்பிணி பெண்களுக்கென தமிழ் பேசும் குடும்பநல உத்தியோகத்தர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சு தேசிய அமைச்சாகும். இதற்காக தேசியக் கொள்கையை பிரகடனப்படுத்த வேண்டும். இந்நிலையில் மலையகத்தில் பெருந்தோட்ட நிருவாகம் மற்றும் மாகாண சபைகளுக்கு கீழுள்ள வைத்தியசாலைகள் விடயத்தில் தேசியக் கொள்கை இல்லாமை இலவச சுகாதார சேவை மலையக மக்களை சென்றடையாமை பாரிய குறையாக இருக்கின்றது.

2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்று மலையகத்தில் இருக்கும் 548 பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து அதனை அபிவிருத்தி செய்து, தமிழ் பேசும் குடும்பநல உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டன.

இதில் ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட வைத்தியசாலைகள் பல இன்னும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படாது இருக்கின்றது. பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வைத்தியசாலைகள் இன்னும் பொறுப்பெடுக்கபடவில்லை. இதனை கைவிட்டுள்ள காரணமென்ன. நாங்கள் மலையகத்தை சேர்ந்த தமிழ் பேசும் 1300 குடும்பநல உத்தியோகத்தர்களை சேர்த்தோம். அதுவும் இடையில் நிறுத்தப்பட்டுள்ளன.

கொரோனா காலத்தில் இலவச சுகாதார சேவைகள் அங்குள்ளவர்களுக்கு சரியாக சென்றடையவில்லை. ஆனால் 1990 இலவச அம்பியூலன்ஸ் சேவை அவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கியுள்ளது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். இதேவேளை சுகாதார அமைச்சில் பெருந்தோட்டத்துறைக்கான பிரிவு உள்ளது. ஆனால் அது இயங்குவதில்லை. ஏன் அதனை செய்யவில்லை. நான் எனது காலத்தில் சேர்த்த வைத்தியசாலைகள் அபிவிருத்தி இன்றி இருக்கின்றன. சுகாதார அமைச்சை மாகாண சுகாதார அமைச்சு என்று கட்டுப்படுத்தாது செயற்படுத்த வேண்டும். தேசிய சுகாதார சேவையை மலையக தோட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும்.

இன்று மலையக மக்கள் கோதுமை மா விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வீட்டிலும் எந்த நேரத்தில் சமையல் எரிவாயு வெடிக்குமோ என்ற பிரச்சனையும் காணப்படுகின்றது. இதேவேளை மலையகத்தில் மொழிப் பிரச்சனையை எதிர்நோக்கும் கர்ப்பிணி பெண்களின் நன்மை கருதி அங்கு குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் தாதியர்களை நியமிக்க வேண்டும்.


# LOLC ஃபினான்ஸ் பிஎல்சி நிதி அறிக்கைகள்

LOLC பினான்ஸ்

2021 செப்டம்பர் 30 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

### இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய மொத்த வருமானம்

| | கம்பனி | | |
|---|---|---|---|
| | 2021 செப்டம்பர் 30 இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கு | | |
| | 30.09.2021 தணிக்கை செய்யப்படாதது ரூபா.'000 | 30.09.2020 தணிக்கை செய்யப்படாதது ரூபா.'000 | மாறுபாடு* % |
| வட்டி வருமானம் | 14,992,037 | 17,316,571 | (13) |
| வட்டி செலவினம் | (4,465,572) | (6,947,064) | (36) |
| நிகர வட்டி வருமானம் | 10,526,465 | 10,369,507 | 2 |
| நிகர பிற இயக்க வருமானம் | 1,612,148 | 4,871,092 | (67) |
| **மொத்த வருமானம்** | **12,138,613** | **15,240,599** | **(20)** |
| **இயக்க செலவுகள்** | | | |
| வட்டி செலவைத் தவிர்ந்த ஏனைய செலவுகள் | (344,765) | (547,879) | (37) |
| ஆளணி செலவினங்கள் | (1,574,739) | (1,413,092) | 11 |
| தேய்மானம் | (87,831) | (78,987) | 11 |
| பொது மற்றும் நிர்வாக செலவுகள் | (2,739,640) | (2,939,158) | (7) |
| வரிவிதிப்பு மற்றும் சாத்தியமான இழப்புகளுக்கான | | | |
| **ஏற்பாடுகளுக்கு முன் செயல்பாடுகளின் லாபம்** | **7,391,637** | **10,261,482** | **(28)** |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | (2,825,089) | (9,812,423) | (71) |
| **சாத்தியமான இழப்புகளுக்கான ஏற்பாட்டிற்குப் பிறகு இயக்க லாபம்** | **4,566,548** | **449,059** | **917** |
| நிதி சேவைகளுக்கு மதிப்பு கூட்டப்பட்ட வரி | (654,488) | (198,506) | 230 |
| **வருமான வரி செலவுக்கு முன் லாபம்** | **3,912,060** | **250,553** | **1,461** |
| வருமான வரி (செலவு) / தலைகீழ் | (938,894) | (70,155) | 1,238 |
| **வரிவிதிப்புக்குப் பிறகு லாபம்** | **2,973,166** | **180,398** | **1,548** |
| **மற்ற விரிவான வருமானம்** | | | |
| **லாபம் அல்லது இழப்புக்கு மறுவகைப்படுத்தக்கூடிய பொருட்கள்** | | | |
| நியாயமான மதிப்பு இருப்பின் இயக்கம் | - | 19,305 | (100) |
| ஹெட்ஜ் நிதிய நகரும் | (3,754) | 56,564 | (107) |
| **லாபம் அல்லது இழப்புக்கு மறுவகைப்படுத்தக்கூடிய மொத்த மதிப்பு** | **(3,754)** | **75,869** | **(105)** |
| **மொத்த பிற விரிவான வருமானம், வரி நிகர** | **(3,754)** | **75,869** | **(105)** |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | **2,969,411** | **256,267** | **1,059** |
| **ஒரு பங்குக்கு அடிப்படை வருமானம்** | **0.57** | **0.03** | |

[illegible]

*[illegible]

### நிதியியல் நிலைமைக் கூற்று

| இல் இருந்தவாறு | 30.09.2021 தணிக்கை செய்யப்படாதது ரூபா.'000 | 31.03.2021 தணிக்கை செய்யப்பட்டது ரூபா.'000 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளும் | 20,033,868 | 13,422,690 |
| வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுடன் வைப்பு | 5,615,015 | 7,255,306 |
| அரசாங்க பத்திரங்கள் மற்றும் மீளவாங்கும் முதலீடு | 14,185,008 | 15,838,453 |
| வழித்தோன்றல் நிதி கருவிகள் | 210,625 | 325,029 |
| **கடன் செலவில் நிதி சொத்துக்கள்** | | |
| நிதி குத்தகை | 44,797,724 | 43,099,407 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 63,627,035 | 61,350,310 |
| முதலீட்டு பத்திரங்கள் | 1,455,794 | 5,498,000 |
| பிற சொத்துக்களைகள் | 608,089 | 731,692 |
| இணைப்பாளர்களிடமிருந்து பெற வேண்டிய தொகை | 40,576 | 33,222 |
| பெறுகைகள் | 267,867 | 271,727 |
| முதலீட்டு சொத்துக்கள் | 21,601,563 | 21,088,740 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 1,662,863 | 1,163,218 |
| **மொத்த சொத்துக்கள்** | **172,306,043** | **170,224,996** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கி மேலதிகப்பற்று | 2,681,923 | 1,861,003 |
| வட்டி தாங்கும் கடன்கள் | 16,548,857 | 16,437,442 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்பு | 105,950,327 | 107,791,136 |
| வர்த்தக கொடுப்பனவுகள் | 712,000 | 144,788 |
| ஏனைய பொறுப்புகள் | 5,426,273 | 4,557,547 |
| வழித்தோன்றல் நிதி கருவிகள் | 2,304 | - |
| இணை கம்பனிகளுக்கு செலுத்தவேண்டிய தொகை | 94,262 | 620,862 |
| நடப்பு வரி செலுத்த வேண்டியது | 1,747,314 | 857,903 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு | 1,733,249 | 1,733,249 |
| பணியாளர் நன்மை கொடுப்பனவுகள் | 351,583 | 332,532 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **133,248,098** | **134,336,462** |
| **பங்காளர்களின் நிதி** | | |
| பங்கு மூலதனம் | 12,762,500 | 12,762,500 |
| சட்டரீதியான ஒதுக்க நிதி | 3,596,579 | 3,596,579 |
| மறுமதிப்பீடு ஒதுக்கம் | 328,838 | 328,838 |
| பணப்புழக்க ஹெட்ஜ் ஒதுக்கம் | 23,853 | 27,608 |
| நியாயமான மதிப்பு ஒதுக்கங்கள் | 45,446 | 45,446 |
| கைத்திருப்பு வருமானங்கள் | 22,100,729 | 19,127,563 |
| **மொத்த சமநிலை** | **38,857,945** | **35,888,534** |
| **மொத்த பொறுப்புகள் மற்றும் பங்கு** | **172,306,043** | **170,224,996** |
| **ஒரு பங்குக்கு நிகர சொத்து மதிப்பு** | **7.40** | **6.84** |

[illegible]

### தெரிவு செய்யப்பட்ட செயற்திறன் குறிகாட்டிகள்

| விபரவிபரம் | இல் இருந்தவாறு 30.09.2021 | | இல் இருந்தவாறு 30.09.2020 | |
|---|---|---|---|---|
| | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| **ஒழுங்குமுறை மூலதன போதுமை (%)** | | | | |
| அடிப்படை மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்) ரூ.'000 | 15.98% | 8.00% | 14.14% | 7.00% |
| மொத்த மூலதன தளம் ரூ.'000 | 17.73% | 12.00% | 15.27% | 11.00% |
| [illegible] | 29.00% | 10.00% | 30.61% | 10.00% |
| **சொத்துக்களின் தரம் (கடன்களுக்கான தரம்)** | | | | |
| [illegible] | 13.80% | | 15.19% | |
| [illegible] | 3.32% | | 6.77% | |
| [illegible] | 18.31% | | 32.92% | |
| [illegible] | 69.87% | | 58.26% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| வட்டி எல்லை | 14.73% | | 11.51% | |
| [illegible] | 27.43% | | 0.27% | |
| [illegible] | 15.91% | | 1.17% | |
| [illegible] | 39.11% | | 33.97% | |
| **ஒழுங்குபடுத்தப்பட்ட திரவத்தன்மை (ரூ.'000)** | | | | |
| [illegible] | 291.21% | | 224.26% | |
| [illegible] | 28.53% | | 12.10% | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| [illegible] | 133 | | 101 | |
| [illegible] | (SL) A (Stable outlook) | | (SL) A (Stable outlook) | |
| [illegible] | | | | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |
| [illegible] | - | | - | |

ICRA லங்கா கடன் மதிப்பீட்டால் LOLC நிதி நிறுவனம் A (நிலையான) என மதிப்பிடப்பட்டுள்ளது.

கீழ் கையொப்பமிட்டுள்ள LOLC ஃபினான்ஸ் பிஎல்சி இன் பிரதான நிறைவேற்று அலுவலர், நிதிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்படாத உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதியியல்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| (கையொப்பமிடப்பட்டது) | (கையொப்பமிடப்பட்டது) | (கையொப்பமிடப்பட்டது) |
|---|---|---|
| திரு. கொன்ரட் டயஸ் | புத்திக விதுசங்க திரு | ஜீரேந்திர குணதிலக்க திரு |
| பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி | தலைமை நிதி அதிகாரி | இணங்குவிப்பு அலுவலர் |

நவம்பர் 08, 2021
கொழும்பு

LOLC ஃபினான்ஸ் பிஎல்சி
No. 100/1 Sri Jayewardenepura Mawatha, Rajagiriya, Sri Lanka.
Tel: 011 5880880 Fax: 011 2865602 E-mail: lofin@lankaorix.com
Web: www.lankaorix.com

# கடலரிப்பினால் கல்முனைக்கு பாரிய அச்சுறுத்தல் அவசர உதவியைக் கோருகிறது மாநகர சபை

**கல்முனைக்குடி நிருபர்**

கல்முனைப் பிரதேசத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களைக் கோரும் தீர்மானமொன்று கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 44 ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் இடம்பெற்றபோது மாநகர சபை உறுப்பினர் பொன். செல்வநாயகம் இது தொடர்பான பிரேரணையை கொண்டுவந்திருந்தார். இதனை மாநகர சபை உறுப்பினர் எம்.குபேரன் வழிமொழிந்தார்.

உறுப்பினர் பொன். செல்வநாயகம் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையில்;

கடந்த பல வருடங்களாக எமது கல்முனைப் பிரதேசமானது பருவப்பெயர்ச்சி மழை காலங்களில் கடலரிப்புக்குள்ளாகி வந்தபோதிலும் சாதாரண காலங்களில் வழமைநிலைக்குத் திரும்பிவிடும். ஆனால் அண்மைக்காலமாக கடல் சீற்றத்தினால் எமது கல்முனைப் பிரதேசம் பாரியளவில் கடலரிப்புக்குள்ளாகி வருகின்றது.



குறிப்பாக பாண்டிருப்பு பகுதியில் கடலரிப்பு மிகக்கடுமையாக காணப்படுகின்றது. இதனால் எனது வட்டாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. தென்னந்தோப்புகள் அழிவடைந்துள்ளன. மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. சில தூரமளவில் கொங்கிரீட் வீதியும் கடலில் சங்கமமாகியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் சிவன் கோவில் மற்றும் விஷ்ணு மடாலயம் போன்றவற்றின் முன்னாலும் கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

கல்முனை கடற்கரைப் பள்ளியில் தொடங்கி பெரியநீலாவணை சேதனப் பசளை உற்பத்தி நிலையம் வரை பல கோடி ரூபா நிதியில் காபட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற கடற்கரை வீதியையும் கடல் விழுங்கும் அபாயம் காணப்படுகிறது. இந்த நிலையை நீடிக்கவிட்டால் எமது சொத்துக்கள் கடலால் காவுகொள்ளப்பட்டு, பாரிய அழிவுகள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகையினால், எமது மாநகர சபையானது இது விடயத்தில் விசேட திட்டங்களை வகுத்து, கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சூழல் பாதுகாப்பு அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களின் உதவியுடன் அவற்றை செயற்படுத்தி, இக்கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது விடயத்தில் மக்களினதும் வளங்களினதும் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு எமது மாநகர சபையானது அதிக கரிசனை செலுத்தி, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு வலியுறுத்தப்படும் எனத் தெரிவித்த மாநகர முதல்வர், இத்தீர்மானத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்குமாறு சபைச் செயலாளரை அறிவுறுத்தினார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**கற்பிட்டி நிருபர்**

புத்தளத்தில் குடும்பத்தகராறு காரணமாக கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் நூர் நகர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் 2 ஆம் வட்டாரத்தில் உள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

குடும்ப உறவினர்களுக்கிடையில் தனிப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் சில நாட்களாக ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிவிட அது இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது, அங்கிருந்த ஒருவர், மற்றையவரை கூரிய ஆயுதம் ஒன்றினால் கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் காயமடைந்தவரை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, புத்தளம் பொலிஸாருடன் இணைந்து பொலிஸ் தடயவியல் பிரிவினரும் சம்பவ இடத்திற்கு வருகைதந்து கள விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் 34 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பி.சி.ஆர். பரிசோதனைகள் கிடைக்கப்பெற்றதும், பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




சம்பளப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு கண்டு, உடன் சம்பளத்தை அதிகரிக்குமாறு வலியுறுத்தி கொழும்பில் தபால் ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை காணலாம்.
படப்பிடிப்பு: எஸ்.ரி. ரமேஷ்

# வைத்தியசாலை வீதியின் அவல நிலை



**தோப்பூர் நிருபர்**

மூதூர் கட்டைப்பறிச்சான் தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலை வீதியின் அவல நிலையே இது.

300 மீற்றர் அளவான நீளமுடைய இவ்வீதியைக் கடந்தே மக்கள் தமது வைத்தியத் தேவைக்காக ஆயுர்வேத வைத்தியசாலைக்கும் ஏனைய தேவைகளுக்கும் செல்ல வேண்டியுள்ளது.

மழை காலங்களில் இவ்வீதியினூடாக வாகனங்களில் கூட மக்கள் முறையாக பயணம் செல்ல முடியாதளவு இவ்வீதி ஆறுபோல் நீர் தேங்கிக் கிடக்கிறது.

எனவே, இவ்வீதியில் மழை காலங்களில் நிரம்பி ஆக்கிரமித்திருக்கும் வெள்ள நீரை வழிந்தோடச் செய்வதற்கு தற்காலிக வடிகாலமைப்பை சரி தோண்டி ஏற்பாடு செய்துகொடுப்பது அதிகாரிகளினது கடமையல்லவா?

சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவை சொல்லியும் ( கடிதம் ஊடாகவும் நேரடியாகவும் ) இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் நடைபெறாமை கவலையளிப்பதாக இவ்வீதியை பயன்படுத்தும் மக்களும் ஆயுர்வேத வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, விரைந்து இதற்குரிய உடனடித் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதோடு, காலக்கிரமத்தில் பலரும் பயன்படுத்தும் இவ்வீதியை நிரந்தர வடிகாலமைப்புடன் புனர்நிர்மாணம் செய்துகொடுக்க, உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அக்கராயன் குளம் வான் பாய்கிறது

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் வான் பாயத் தொடங்கியுள்ளது.

25 அடி நீர் கொள்ளளவினைக் கொண்ட இக்குளம் நிரம்பி வான் பாயத் தொடங்கி உள்ளது.

இக்குளம் வான் பாய்வதால் திருமுறிகண்டிக்கும் அக்கராயனுக்கும் இடையிலான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை இராணுவ படையணி மெய்வல்லுனர் போட்டியில் அஸான் தங்கப்பதக்கம் வென்றார்

57ஆவது இலங்கை இராணுவ படையணி மெய்வல்லுனர் போட்டியில் 10 அம்ச போட்டியில் பங்குபற்றிய நிந்தவூரைச் சேர்ந்த எம்.ஐ.எம். அஸான் 6892 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார்.



கடந்த 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் இராணுவ படையணியின் மின்சார பொறியியல் பிரிவு படையணியை பிரதிநிதித்துவப்படுத்தி இவர் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் எம்.ஐ.எம். அஸான் 7 முதலிடங்களையும் 3 இரண்டாமிடங்களையும் பெற்று மொத்தமாக முதன்முறையாக தங்கப் பதக்கத்தை வென்றதுடன், நிந்தவூர் சார்பாக 10 அம்ச போட்டிகளில் தங்கப் பதக்கம் பெறும் முதல் வீரரும் இவர் ஆவார்.

அத்துடன் இலங்கையின் 10 அம்ச மெய்வல்லுனர் தர நிலையிலும் முதலிடத்தை பெற்றுள்ளதோடு தேசிய மெய்வல்லுனர் குழுவுக்கும் இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் நிந்தவூர் லகான் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இடமாற்றம் பெற்றுச் செல்லும் வைத்தியர்கள் கௌரவிப்பு

**சம்மாந்துறை நிருபர்**

கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் சேவை செய்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் வைத்தியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வைத்திய அத்தியட்சர் டாக்டர் எம்.வை.இஸ்ஹாக் தலைமையில் இடம்பெற்றது.



இதன்போது வைத்திய அத்தியட்சர் டாக்டர் எம்.வை.இஸ்ஹாகினால் வைத்தியர்களான ஏ.ஆர்.எப்.திவ்சியா மற்றும் பீ.ஜே.ரோஷான் ஆகியோர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய ஆயுர்வேத ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், திறந்த பல்கலைக்கழகத்தின் முன்னாள் சமூகவியல் பீடாதிபதி முஹம்மட் ஜாபர், காரைதீவு மருந்தக வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சி.எம்.ஹாலித் உள்ளிட்ட வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



புதிய அலை கலை வட்டத்தின் கலைத்துறை மேம்பாட்டுக்கான கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கும் நிகழ்வு புரவலர் ஹாசிம் உமரின் இல்லத்தில் இடம்பெற்றது. வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா மகஜரை புரவலர் ஹாசிம் உமரிடம் வழங்குவதை காணலாம். வட்டத்தின் தலைவர் ஷண்முகம் , பொருளாளர் ஓவியன் .ஈ.பாலா ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.



'கல்விக்கு கரம் கொடுப்போம்' செயற்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நவம்பர் மாதத்திற்கான நான்காவது பாடசாலைக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முகமாக இரத்தினபுரி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமான இத்தகந்த இலங்காபேரிய தமிழ் வித்தியாலயத்திற்கு அண்மையில் வெண்பலகைகள் (WHITE BOARD), பிளாஸ்ரிக் கதிரைகள், பாடசாலை கட்டிடத் தொகுதியினை வர்ணம் பூசி அழகுபடுத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் அமைப்பின் செயலாளர் ஆசிரிய ஆலோசகர் எஸ். தயாளன் தலைமையில் நடைபெற்றதைக் காணலாம்.

# உலக உணவுத் திட்டத்தின் உயர்மட்டக் குழுவினர் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்கு கள விஜயம்

## அமுல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து ஆராய்வு

**முல்லைத்தீவு நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தலைமையில் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் அப்துல் ராகிம் சித்திக் மற்றும் பிரதிப் பணிப்பாளர் அன்றியா பிரார்டொ, அரச உலக உணவுத் திட்ட இணைப்பாளர் முஸ்தபா நியமத் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களை நேரடியாக பார்வையிட்டனர்.

இதன்போது உலக உணவுத் திட்டத்தின் செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட ஆலம்குளம் தொடர்பிலான பயன்கள் கிராமிய நன்னீர் மீன்பிடி அமைப்பிற்கான உதவிகளின் மூலம் கிடைக்கப்பெற்ற பயன்களை கமக்கார அமைப்பிடம் கேட்டறிந்ததுடன் தென்னியன்குளம் கிராம மட்ட விவசாயிகள் மற்றும் நன்னீர் மீனவர்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பரணிதரன், துணுக்காய் பிரதேச செயலாளர் லதுமீரா, மாவட்ட உலக உணவுத் திட்ட பொறுப்பதிகாரி ஜெயபவானி கணேசமூர்த்தி, NA-Q-DA நிறுவனப் பணியாளர்கள், மாவட்ட உலக உணவுத் திட்டத்தின் உப அலுவலக அலுவலகர்கள் மற்றும் பணியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# வவுனியாவில் சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்படைந்த குடும்பங்களுக்கு இழப்பீடுகள்

நெளுக்குளம் நிருபர்

வவுனியாவில் சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்படைந்த குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருவதாக உதவி மாவட்ட செயலாளர் மகிந்தன் சபரிஜா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பெய்த கன மழை காரணமாக வவுனியாவில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் 63 குடும்பங்களைச் சேர்ந்த 224 பேரும் பாதிப்படைந்திருந்தனர்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இராசேந்திரங்குளம் பகுதியில் இடி மின்னல் தாக்கம் காரணமாக ஒருவர் மரணமடைந்த நிலையில் இழப்பீட்டுக் கொடுப்பனவாக 2 50,000 ரூபா வழங்கப்படவுள்ளது. அதன் முதல்கட்ட கொடுப்பனவாக 25,000 ரூபா உடனடியாக வழங்கப்பட்டுள்ளது.

கன மழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்த 7 வீடுகளுக்குமான இழப்பீட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் முதல்கட்ட இழப்பீடாக 10,000 ரூபா ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடுகளுக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட மிகுதி இழப்பீட்டுத் தொகையும் விரைவில் வழங்கப்படும். மேலும், மழையினால் பாதிப்படைந்த 63 குடும்பங்களுக்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக நிவாரண உதவித் திட்டங்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உதவி மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எமக்கான நீதி கிடைக்கும் வரை போராடிக்கொண்டே இருப்போம்

## காணாமல் போனோரின் உறவுகள்





வவுனியா நிருபர்

எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்போம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பின் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களிற்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியினை எந்த ஒரு அரசாங்கமும் வழங்கவில்லை. எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. எனவே எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம். அத்துடன் முல்லைத்தீவில் ஊடகவியலாளரை இராணுவத்தினர் தாக்கியமை அநீதியான செயற்பாடு. மக்களின் பாதுகாப்புக்காகவே இராணுவம் நிலைகொண்டுள்ளதாகக் கூறி தமிழ் மக்களை பாதிக்கும் செயற்பாடுகளையே இந்த இராணுவம் முன்னெடுத்து வருகின்றது. எனவே அதனையும் வன்மையாக கண்டிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

# தவறுகளை ஊடகங்கள் ஊடாக திசை திருப்ப முயலக்கூடாது

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

வட மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளை சிலர் ஊடகங்கள் ஊடாக திசை திருப்ப முயல்வதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாக வட மாகாண ஆளுநர் தியாகராஜா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாண நிர்வாகங்களில் நிர்வாக ரீதியான முறைகேடுகள் இடம்பெற்றமை தொடர்பில் எனக்கு பலரும் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர். அவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சில அதிகாரிகள் ஊடகங்கள் ஊடாக தவறுகளை மறைப்பதற்கு திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை வழங்க முற்படுகின்றனர்.

மக்களின் முறைப்பாடுகள் வழங்கப்பட்ட அலுவலக நேர எட்டு மணித்தியாலத்துக்குள் கவனம் செலுத்தி மூன்று நாட்களுக்கு ஏற்படாமல் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும்.

ஆகவே கடந்த காலங்களில் இடம்பெற்ற நிர்வாக ரீதியான தவறுகளை ஆதாரங்களை சமர்ப்பித்தால் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்காக மனிதாபிமான முறையில் நீதி பெற்றுக்கொடுக்கப்படும் என்றனர்.

# 2022 முதல் 2025 வரையிலான மூன்று ஆண்டுகளில் நகர திட்டமிடல் துறையை மேம்படுத்த ஒப்பந்தம்



அடுத்த 2022 முதல் 2025 வரையிலான மூன்று ஆண்டுகளில் நாட்டில் நகர திட்டமிடல் துறையை மேம்படுத்தி கட்டியெழுப்புவதையும் நகர அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் அது தொடர்பான விடயங்களையும் நோக்கமாகக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்தை நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் நகரத் திட்டமிடல் துறையின் தரத்தை மேம்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி, திண்மக்கழிவு அகற்றல் மற்றும் பொது சுகாதாரத் தறை இராஜாங்க அமைச்சும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்துடன் அண்மையில் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் இலங்கை அலுவலகத்தின் பிரதான முகவர் டெட்சன் யமடா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின்படி கழிவுகளை அகற்றுதல் மற்றும் சமூக சுகாதாரம் தொடர்பான செயலூக்கமான மற்றும் நிலையான வேலைத்திட்டத்தை இலங்கை முன்னெடுக்கும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நகர அபிவிருத்தி, கழிவு அகற்றல் மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா, தலைவர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல், நகர அபிவிருத்தி இந்த வேலைத்திட்டம் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பட்டய நகர கட்டிடக்கலை நிபுணர் பிரசாத் ரணவீரவின் வழிகாட்டலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



கல்முனை மாநகர சபையின் 44 ஆவது மாதாந்த சபை அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற போது கின்னியா. குறிஞ்சாங்கேணி இழுவைப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படுவதைக் காணலாம்.

படம்: கல்முனைக்குடி நிருபர்

# கந்தளாய் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 63 மெற்றிக் தொன் சேதன பசளை கையளிப்பு



முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை கந்தளாய் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கந்தளாய் லக்பொஹர நிறுவனத்துக்கு 63 மெற்றிக் தொன் பதப்படுத்தப்பட்ட சேதன பசளை கையளிக்கப்பட்டது. கந்தளாய் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவென இந்த பசளை கையளிக்கப்பட்டுள்ளது. ஏற்னவே நாற்பதாயிரம் கிலோ சேதன பசளை வகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் லக்பொஹர நிறுவனத்தின் கந்தளாய் கிளை முகாமையாளர் தெரிவித்தார். இந்நிகழ்வில் சிவில் பாதுகாப்பு கிழக்கு மாகாண தளபதி கேணல் உபாலி ரத்நாயக்க, தம்மிக்க ரத்நாயக்க மற்றும் லக்பொஹர நிறுவனத்தின் கிழக்கு மாகாண முகாமையாளர், மற்றும் விவசாய அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

# இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கும் விருது வழங்கிக் கௌரவிப்பும்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடத்தப்படும் இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு கௌரி சங்கரி தவராசா ஞாபகார்த்தமாக எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கண் பரிசோதனை செய்தோருக்கு கண்ணாடி வழங்கல் மற்றும் அந்தப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் இந்நிகழ்வில் சிவப்பிரகாசம் (அதிபர்), மயூரன் (பிரதி அதிபர்), அஞ்சலோ ஜேசுதாசன் (நேசன் ட்ரஸ்ட் வங்கி - முகாமையாளர்), டி.ஆர்.டீ. பிரதீப் பெரேரா (கிராம அதிகாரி), திருமதி சாருமதி சசிதரன் (கிராம அதிகாரி), கா. ஜெ. சிவராஜேஸ்வரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பொற்பணி செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் நிலாம், பொதுச் செயலாளர் எஸ்.கே.தனையரட்ணம், பிரதித் தலைவர் சத்தியமூர்த்தி, லயன் ரவீந்திரன், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# 20,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசு தீர்மானம் மியன்மாரில் இருந்து வருகிறது

ந.ஜெயகாந்தன்

உள்ளூர் சந்தையில் அரிசி விலையை நிலைப்படுத்துவதற்காக மியன்மாரில் இருந்து 20,000 மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வர்த்தக அமைச்சர் இது தொடர்பாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பற்றாக்குறையின்றி போதுமானளவு அரிசியை நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கும், பாதுகாப்பான கொள்ளளவைப் பேணுவதற்கும் இயலுமான வகையில் 100,000 மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு 2021 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரசாங்கத்திடமிருந்து அரசாங்கத்திற்கு எனும் அடிப்படையின் கீழ் இலங்கை அரசாங்கம் மற்றும் மியன்மார் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் 20,000 மெற்றிக்தொன் அரிசியை, ஒரு மெற்றிக்தொன் 460 அமெரிக்கன் டொலர்களுக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை

தங்கக் கடன் வசதியை வழங்கும் HNB FINANCE PLC வவுனியா, பலாங்கொடை, மொரட்டுவை, களுத்துறை, குருநாகல, காலி, மதவாச்சி, பொலன்னறுவை, தெகியத்தகண்டிய, கந்தளாய், வலப்பனை, கண்டி சிடீ சென்டர், கேகாலை, நிக்கவரெட்டிய, பண்டாரவளை, மொனராகலை, கிருலப்பனை (நகர கிளை), அம்பாறை, மன்னார், மல்லாவி, இரத்தினபுரி, மட்டக்களப்பு, தம்புள்ளை, ஹட்டன், ஹொரணை, யாழ்ப்பாணம், மாத்தறை, நுவரெலியா, புத்தளம், திருகோணமலை, மாத்தளை, பொத்துவில், திஸ்ஸமஹாராம, பதுளை, கிளிநொச்சி, கம்பஹா, ஹாலி எல, நீர்கொழும்பு, நிட்டம்புவ, கடுவெல, நெல்லியடி, வென்னப்புவ, பதவிய, அனுராதபுரம், முல்லைத்தீவு வெலிகட மற்றும் நாவல பிரதான காரியாலய ஆகிய கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2021.08.31 வரை தங்க நகை அடகில் வைக்கப்பட்டு ஆனாலும் 2021.12.13 வரை மீட்கப்படாத மற்றும் புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏல திகதி : 2021.12.14
ஏல நேரம் : மு.ப 10.30
ஏலம் செய்யப்படும் இடம் : இல.168, நாவல வீதி, நுகேகொடை

- ஏலத்தில் பங்குபெறும் அனைவரும் அவர்களது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.
- ஏலம் நடைபெறும் திகதியை ரத்து செய்வதற்கு, பிற்போடுவதற்கான அல்லது ஒன்றிணைக்கும் உரிமை HNB FINANCE PLC இற்கு உண்டு

HNB FINANCE PLC
இல.168, நாவல வீதி, நுகேகொடை.
Tel: 0112 02 48 48
Fax: 0112 17 62 63
HNB FINANCE

# டயகம வைத்தியசாலையில் மரம் முறிந்து விழுந்ததில் கட்டிடத் தொகுதிக்கு சேதம்

அக்கரப்பத்தனை நிருபர்



டயகம பிரதேச வைத்தியசாலையில் பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததால் வைத்தியசாலை கட்டிடத் தொகுதி சேதமாகி உள்ளதுடன் பிரசவ விடுதியும் முற்றாக சேதமாகியது.

அத்தோடு கூரை உடைந்து சேதம் ஆகியதால் வைத்தியசாலை நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம்நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் நிகழ்ந்துள்ளது. இதேவேளை மின்சாரமும் மாலை முதல் துண்டிக்கப்பட்டிருந்தது.

வைத்தியசாலைக்கு பின்புறத்தில் இருந்த மரம் ஒன்றினை டயகம வெஸ்ட் தோட்ட நிர்வாகம் தறிக்க முற்பட்ட போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

உயிர்ச்சேதங்களோ,காயங்களோ ஏற்படவில்லை. இதன்போதுகட்டிடம் மாத்திரமே சேதம் அடைந்துள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். இது தொடர்பான விசாரணைகளை டயகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சர்வதேச ஆன்மீக அமைப்பின் தலைவருக்கு கல்முனை மாநகரில் கோலாகல வரவேற்பு

இலங்கை அரசாங்கத்தின் விசேட விருந்தினராக வருகை தந்திருக்கின்ற அருளிப்பத்துல் காதிரிய்யாவின் சர்வதேச ஆன்மீக அமைப்பின் தலைவர், டாக்டர் அஹ்மத் நாஸிரை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை மாநகரத்தில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்றது.

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்கா சரீப் பள்ளிவாசலுக்கு வருகை தந்த ஆன்மீகத் தலைவர் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

பின்னர் கல்முனை பிரதான நகர் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட ஆன்மீகத் தலைவர், முஹைதீன் பெரிய ஜு்ம்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார் .இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மஜ்லிஸிலும் கலந்து கொண்டார்.

ஆன்மீகத் தலைவர் மற்றும் அவருடன் வருகைதந்த அதிகாரிகளுக்கு வரவேற்பு வழங்கப்பட்டதுடன் இலங்கைக்கு விசேட விருந்தினராக வருகை தந்திருக்கும் ஆன்மீக தலைவர், கல்முனை முஹைதீன் ஜு்ம்மா பெரிய பள்ளிவாசல் ,கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளி நாகூர் ஆண்டகை தர்கா பள்ளிவாசல் ஆகியவற்றின் சார்பாக நினைவுச்சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதில் உலமாக்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது மைதானத்திற்கு மின்னொளி



கல்முனைக்குடி நிருபர்

சாய்ந்தமருது பொலிவேரியன் ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்திற்கு ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் ஏற்பாட்டில் கோப்ரா எல்.ஈ.டி. மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இம்மைதானத்தில் பாவனையில் இருந்தமின்விளக்குகள்பழுதடைந்து இருள் சூழ்ந்து காணப்பட்டிருந்த நிலையில் சாய்ந்தமருது கிரிக்கெட் சபையின் கோரிக்கையின் பேரில் ரஹ்மத் மன்சூர் குறுகிய காலத்தில் இம்மைதானத்திற்கு மின்னொளியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

தமது கோரிக்கையை துரிதமாக நிறைவேற்றித்தந்த பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் மற்றும் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்த ரஹ்மத் பவுண்டேசன் செயலாளர் சம்சுல் முனா ஆகியோருக்கு சாய்ந்தமருது கிரிக்கெட் சபை நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

# மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் எரிவாயு விபத்து தொடர்பில் பகுப்பாய்வு

எரிவாயு விபத்துக்கள் தொடர்பான தர பகுப்பாய்வு நிபுணர் அறிக்கையை இந்த வாரம் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக மொரட்டுவ பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

நான்கு பேர் கொண்ட நிபுணர் குழுவினால் இந்த அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாக மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் இரசாயன மற்றும் செயல்முறைகள் திணைக்களத்தின் தலைவர் பேராசிரியர் சாந்த வல்போலகே தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்தஎரிவாயு விபத்துகள் தொடர்பான அறிவியல் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எரிவாயு தொடர்பான வெடிப்புகள் மற்றும் தீ விபத்துக்கள் தொடர்பான செய்திகளை அடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்ட எரிவாயு மாதிரிகளை ஆய்வுக்கூட பரிசோதனைக்கு அனுப்ப நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பான 12 ஆய்வக அறிக்கைகள் மேலதிக பரிசோதனைகளுக்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

# கோதுமை மா விலை அதிகரித்ததால் பெருந்தோட்ட மக்கள் பெரும் பாதிப்பு

பத்தனை நிருபர்

கோதுமை மாவின் விலை திடீரென அதிகரித்ததால் பெருந்தோட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திடீரென 17 ரூபா 50 சதத்தால் கோதுமை மாவின் விலை அதிகரிப்பு இம்மக்களை மீண்டும் வறுமைக் கோட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.ஒரு தொழிலாளியின் வீட்டில் ஒரு நாளுக்கு 3 அல்லது 5 கிலோ வரை கோதுமை மாவை தமது உணவிற்காக பயன்படுத்துகின்றார்கள்.

இந்த கோதுமை மா விலை அதிகரிப்பின் காரணமாக கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் அனைத்து பேக்கரி உணவுப் பொருட்களும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் குறைந்த சம்பளம் பெறும் இவர்கள் தற்போது அதிகரிக்கப்பட்ட மாவின் விலை காரணமாக தாங்கள் மேலும் மேலும் பொருளாதார சுமைக்கு தள்ளப்படுவதாகவும், பொருட்களின் விலை அதிகரிப்பு ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

# வில்வெளி விபத்தில் ஒருவர் படுகாயம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை கிண்ணியா வில்வெளி பிரதேசத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவில் இருந்து கரங்கல் நோக்கி பயணித்த ஆட்டோ நாய் ஒன்றுடன் மோதியதில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளில் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே பலத்த காயங்களுடன் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.இவ்வாறு விபத்துக்குள்ளான நபர் கிண்ணியா இடிமண் பிரதேசத்தைச் சேர்ந்த ஏ.எம்.பாரூக் என்பவராவார்.








லியோ கெடலியோ கெடமரன் கழகம்,அழுக்கடைந்திருந்த நீர்கொழும்பு கடற்கரையை துப்புரவு செய்யும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டது. இதில் கழகத்தின் அங்கத்தவர்களுடன் நீர்கொழும்பு பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினர்,மாநகர சபை , கடலோர பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கலந்துகொண்டனர்.

படம்: நீர்கொழும்பு நிருபர்

# ஹெரோயினுடன் இருவர் கைது

அநுராதபுரம் நிருபர்

ஹெரோயின் போதைப்பொருளினை வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரை தமுத்தேகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய தமுத்தேகம ரெஜின சந்தி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதுடன் நான்கு கிராமும் 275 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளினை தமுத்தேகம மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் 24,28 வயதுடைய தமுத்தேகம மற்றும் ராஜாங்கனை பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# மொரவெவ நாளாம் வாய்க்கால் பகுதி மக்கள் காணிகளை மீட்டுத் தரக்கோரி ஆர்ப்பாட்டம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை - மொரவெவ நாளாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய சொந்தக் காணிகளை தமக்கு மீட்டுத் தருமாறு கோரி திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1983 ஆம் ஆண்டு தமது சொந்தக் காணிகளை விட்டுச் சென்று இந்தியாவிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்து வந்ததாகவும் தற்போது தங்களுடைய காணிகளுக்குள் செல்
லை வி
டாமல்
தடுப்பதால் தமக்குரிய காணிகளை அரச அதிகாரிகள் பெற்றுத்தரவேண்டும் எனக் கோரியும் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாலாம் வாய்க்கால் பகுதியில் 83 குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் காணிகள் யுத்த காலத்தின் போது கைவிடப்பட்ட நிலையில் இதனையடுத்து வேறு பிரதேசங்களிலிருந்து வந்தவர்களால் தற்போது குறித்த காணிகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமக்கு உரிய ஆதாரங்கள் காணப்படுகின்ற போதிலும் மொரவெவ பிரதேச செயலக அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்தாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வினை பெற்றுக் கொடுக்காமல் தமிழ் மக்களுக்குரிய காணிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

எனினும் குறித்த காணிகள் தொடர்பில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டி கோரல விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதி சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞர் கைது

கற்பிட்டி நிருபர்

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிராம்பியடி செம்மாந்தளுவ பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸ் அத்தியட்சரின் கீழ் இயங்கும் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்தபகுதியில் விஷேட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 350 மில்லி கிராம் ஹெரோயின், 140 போதை மாத்திரைகள் மற்றும் ஐந்து அளவுகளைக் கொண்ட வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.









இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து வித்தியா அபிவிருத்தி சங்கம், ஈழத்து திருநெறி தமிழ் மன்றம், இலங்கை சைவநெறிக் கழகம் இணைந்து நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் எம். தனபாலா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதிகள் மங்கள தீபம் ஏற்றினர். வரவேற்புரையை வைத்திய கலாநிதி சிவஸ்ரீ ஈசான் பிரதாபன் தேசிகரும் தலைமை உரையை சின்னதுரை தனபாலாவும் நிகழ்த்தினர். கனடா, சைவசித்தாந்த பீட செயலாளர் வைத்திய கலாநிதி இ. லம்போதரனின் 'நாவலர் பற்றிய விமர்சனங்களுக்கு ஒரு பதில்' என்னும் நூல் வெளியிடப்பட்டது நூலின் பிரதியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்து சமய அலுவல்கள் இணைப்பாளர் கலாநிதி பாபுசர்மாவிடம் இருந்து கங்கத் திணைக்களப் பணிப்பாளர் ஸ்ரீ ரஞ்சன் பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

படம் ; எஸ். ராம்தாஸ்

# நெஸ்லே லங்கா நிறுவனத்திற்கு 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நிலைபேண் தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருது

நெஸ்லே லங்கா நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நிலைபேண் தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருதுகளில் நான்கு விருதுகளைத் தனதாக்கியுள்ளது. பூமி என்ற பிரிவின் கீழ் பூமிக்கு நன்மைசெய்வதில் அதன் வலுவான முயற்சிகளுக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாக,சுற்றுச்சூழல் மீது நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, வணிகத்திற்கு அப்பாற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேண் தகைமைக்காக சமூகம்-பூமி-இலாபம் ஆகியவற்றில்சிறந்த மும்முனைப் பெறுபேறுகளுக்கான விருது ஆகிய பிரிவுகளில் வென்றுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த 10 நிறுவனங்களில் ஒன்று என்ற விருதையும் நெஸ்லே லங்கா நிறுவனம் பெற்றுள்ளது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற இந்த மதிப்புமிக்க வருடாந்த நிகழ்வானது மக்கள், பூமி மற்றும் இலாபம் ஆகிய மும்முனை இலக்குடனான செயற்திறனை அடைவதில் நிறுவனத்தின் முயற்சிகளுக்காக நிலைபேண் தகைமையில் முன்னின்று செயற்படும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

நமது நுகர்வோர் மற்றும் சமூகத்திற்கு நற்காரியங்களை ஆற்றும் அதேவேளையில்,நமது பூமிக்கு நன்மை விளைவிப்பதற்கு நாங்கள் ஆற்றும் பங்களிப்புக்காக அங்கீகரிக்கப்படுவது ஒரு கௌரவமும் பாக்கியமுமாகும். மீளுருவாக்கம் செய்யப்படக்கூடிய உணவு முறைகளை பாரியளவில் மேம்படுத்த முயற்சிக்கும் அதேவேளையில் எமது செயற்பாடுகள் மூலமான உமிழ்வை பூச்சியமட்டமாக்குவதை நோக்கி எங்கள் பயணத்தை விரைவுபடுத்தியுள்ளோம். பண்ணையிலிருந்து உணவுத் தட்டுவரை எமது முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், மீள்சுழற்சி செய்யக்கூடிய அல்லது மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொதியிடல் முறைகளை நாடுவதன் மூலமாக பிளாஸ்டிக் மாசுபாட்டைச் சமாளிப்பது மற்றும் சுழற்சிப் பொருளாதாரத்தை உருவாக்க உதவுவது உள்ளிட்ட பல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்த ஆண்டு நாங்கள் எங்களுடைய Ready&to&Drink தயாரிப்புகளுக்கு paper straw வை அறிமுகப்படுத்தி,இலங்கையில் நுண்ணுயிர் நீக்கிய பான அட்டைப் பெட்டிகளுக்கான சேகரிப்பு உள்கட்டமைப்பு மற்றும் மீள்சுழற்சி வசதியை ஸ்தாபிக்க உதவினோம். நமது பூமியை பேணிப் பராமரிப்பதில் நடத்தை மாற்றத்தைமேம்படுத்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் நாங்கள் தொடர்ந்து ஒன்றிணைந்துபணியாற்றி வருகிறோம். மேலும்,ஒவ்வொரு ஆண்டும் நமது உற்பத்தித்திறனை அதிகரிக்கும் அதே வேளையில்,அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்களில் முதலீடு செய்வதன் மூலம் எரிசக்தி,நீர் மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் உமிழ்வு போன்ற வளங்களின் பயன்பாட்டைத் தொடர்ந்து குறைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம் என்று பெருமையுடன் கூறுகிறோம். எங்கள் முயற்சிகளுக்கு அங்கீகாரம் கிடைப்பது உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது.




இகரி அழகக்கோன்,உதவி முகாமையாளர்,நிறுவன தொடர்பாடல்கள் - நெஸ்லே லங்கா பந்துல எகொடகே,துணைத் தலைமை அதிகாரி,நிறுவன மற்றும் ஒழுக்காற்று விவகாரங்கள் - நெஸ்லே லங்கா ஜேசன் அவன்சேன்யா, முகாமைத்துவப் பணிப்பாளர், நெஸ்லே லங்கா மற்றும் ரதீனி கொஸ்தா, உதவித் துணைத் தலைமை அதிகாரி,தொடர்பாடல்கள் - நெஸ்லே லங்கா.

---

## JAFFNA MEDICAL ASSOCIATION
## ANNUAL GENERAL MEETING – 2022
## NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association, will be held on Saturday, 29th January 2022 at 11.00 a.m. at the Nurses Training School Lecture Hall Teaching Hospital Jaffna, for the following purposes:

1. To receive and consider the annual report of the committee of management on the affairs of the association, the statement of accounts for the year ended on 31st of December 2021 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for year 2022.
4. To appoint the auditors of the association and to authorize the committee of management to determine their remuneration.

By order of the committee of management,

Honorary Secretary
1st December 2021

---

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
18
08
1969



ஆண்டவன் அடியில்
29
11
2021

### அமரர் செந்தூரன் யாதவகிருஷ்ணன்

(பழைய மாணவன் - யாழ்ப்பாணக் கல்லூரி)

அராலி கிழக்கை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொழும்பு தெஹிவளையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செந்தூரன் யாதவகிருஷ்ணன் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் துரைராஜா, பஞ்சலட்சுமி கிருஷ்ணன் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் அன்பு புதல்வனும் கிருஷ்ணவேணி, கிருஷ்ணஜெயந்தி, கிருஷ்ணவல்லி, கிருஷ்ணஜோதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவசங்கர், ஜெயராஜசிங்கம், சிவக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆரூரன், ஆதவன், மயூரி, இந்து, யதுதனன், கோதனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கவினின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2021) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் Borella Jeyaratna மலர்ச்சாலையில் இடம்பெறவுள்ளதை அறியத்தருகின்றோம்.

No.9B , 4/3, Peter's Lane,
Dehiwela.

தகவல் : குடும்பத்தினர்
0773116763

---
















---

## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING UNIVERSITY OF JAFFNA

## Short Course in English Language for Officers

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from eligible candidates to follow the above course conducted by the Center for Open and Distance Learning, University of Jaffna.**

**DURATION**

- The duration of the courses is 72hrs
- Classes will be conducted in weekends

**ENTRY REQUIREMENTS**

An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream

**Course Fees**

Course Fee Rs.25000.00

**HOW TO APPLY**

Application could be obtained from the Centre for Open andDistance Learning, University of Jaffna during 9.00am to 2.00pmon weekdays.
Or
Application form could be downloaded from the website www.codl.jfn.ac.lk
Duly filled application along with the payment slip for asum of Rs.500/= payable at the Peoples Bank
**AC No:890012520002039**

Application should be sent under registered cover to thefollowing address on or before 20th December 2021.
"Short Course in English Language for Officers" should bewritten on the left hand corner of the envelope.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**25.11.2021**

**Address:**
**Deputy Registrar,**
**Centre for Open and Distance Learning,**
**University of Jaffna.**

---

## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING UNIVERSITY OF JAFFNA

## BASIC SINHALA FOR SCHOOL LEAVERS LEVEL I

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates to follow the above course conducted by the Centre for Open and Distance Learning

**Programme Objectives**

- Know the Alphabets in Sinhala Language
- Practise the Pronouns in Sinhala Language
- Memorize simple basic verbs in Sinhala Language
- Practise the Greetings in Sinhala Language
- Explain Kinship terms in Tamil and Sinhala societies

**Entry Requirments**

An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream

**Course Fees**

Course fee Rs 15000.00

**Duration**

- The Duration of the Course is 60 Hours
- Classes will be conducted in weekends

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**25.11.2021**

**HOW TO APPLY**

Application could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffnaduring 9.00am to 2.00pm on weekdays.

**Or**

Application form could be downloaded from the website www.codl.jfn.ac.lk

Duly filled application along with the payment slip for a sum of Rs.500/= payable at the Peoples Bank AC No: 890012520002013

Application should be sent under registered cover to the following address on or before 20th December2021."Basic Sinhala for School Leavers-Level-1"should be written on the left hand corner of theenvelope.

**Address:**
**Deputy Registrar,**
**Centre for Open and Distance Learning,**
**University of Jaffna, Thirunelvely.**

# ‘ஸ்புட்னிக் தடுப்பூசி மருந்து ஒமைக்ரானுக்கு எதிராகப் போரிடும்’

ஸ்புட்னிக் வி, ஸ்புட்னிக் லைட் ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் ஒமைக்ரான் வகை கொரோனா வைரஸை எதிர்க்கும் திறன் கொண்டிருக்கும் என்று ரஷ்ய சுகாதாரத்துறை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், ஒமைக்ரான் வகை கொரோனா வைரஸுக்கு எதிரான புதிய தடுப்பூசி தயாரிக்கும் ஆய்வுப் பணியிலும் இறங்கியுள்ளது.

உருமாற்றம் அடைந்த ‘ஒமைக்ரான்’ எனும் கொரோனா வகை முதலில் தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது பிரிட்டன், இத்தாலி உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் பரவி வருகிறது. புதிய வகை கொரோனா பரவலைத் தடுக்க அந்தந்த நாடுகள் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மற்ற கொரோனா வகைகளைவிட இது அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலக சுகாதார அமைப்பு கணித்து உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி, ஸ்புட்னிக் லைட் ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் ஒமைக்ரான் வகை கொரோனா வைரஸை எதிர்க்கும் திறன் கொண்டிருக்கும் என்று ரஷ்ய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

மேலும், புதிய ஒமைக்ரான் வகை கொரோனா வைரஸை எதிர்த்துப் போரி



டக்கூடிய பூஸ்டர்களைத் தயாரிக்க தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளது.

ரஷ்யாவின் நேரடி முதலீட்டு நிதியத்தின் தலைமைச் செயல் அதிகாரி டிமிட்ரிவ் இதுகுறித்து கூறுகையில்,

கொரோனா உருமாற்றத்திற்கு ஏற்ப ஸ்புட்னிக் வி, ஸ்புட்னிக் லைட் ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

ஸ்புட்னிக் தடுப்பூசி தயாரிக்கும் கமலேயா நிறுவனம், கொரோனா வைரஸ் மாறுபாட்டிற்கு ஏற்ப தடுப்பூசி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. தற்போது ஒமைக்ரான் வகை கொரோனா வைரஸுக்கு எதிரான புதிய ஸ்புட்னிக் தடுப்பூசியை உருவாக்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

ஸ்புட்னிக் தடுப்பூசியில் பெரிதாக மாற்றம் தேவைப்படாத நிலையில், 45 நாட்களில் ஒமைக்ரானுக்கு எதிராக பெருமளவில் தடுப்பூசியை உருவாக்க முடியும். மாற்றம் தேவைப்பட்டால், பெப்ரவரி 20, 2022க்குள் ஸ்புட்னிக் பூஸ்டர்களை வழங்குவோம் என்று தெரிவித்துள்ளார்.

# உலகளவில் அதிக ஆபத்தை ‘ஒமைக்ரான்’ ஏற்படுத்தும்: உலக சுகாதார அமைப்பு

புதிதாக கண்டறியப்பட்டுள்ள ஒமைக்ரான் வகை கொரோனா நுண்மி உலகளவில் அதிக ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் முதல்முறையாக கண்டறியப்பட்ட ‘பி.1.1.529’ என்ற குறியீடு இடப்பட்டுள்ள புதிய வகை கொரோனா நுண்மிக்கு ‘ஒமைக்ரான்’ என கடந்த நவ. 26 ஆம் திகதி உலக சுகாதார அமைப்பு பெயரிட்டது. அத்துடன் கவலைக்குரிய வகையைச் சேர்ந்ததாக ஒமைக்ரானை வகைப்படுத்தியது.

இதையடுத்து, உஷாரடைந்த உலக நாடுகள் பலவும் தென் ஆபிரிக்காவுக்கான பயணத் தடையை விதிக்கத் தொடங்கியுள்ளன. இந்நிலையில், உலக சுகாதார அமைப்பு திங்கட்கிழமை வெளியிட்ட அபாய மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: கொரோனா தொற்றின் ஒமைக்ரான் வகையில் உள்ள பிறழ்வுகள் நோய் எதிர்ப்புத் திறனிலிருந்து தப்பிக்கும் திறனையும் பரவும் திறனையும் அதற்கு வழங்கக்கூடும்.

இந்த குணாதிசயங்களைப் பொருத்து எதிர்காலத்தில் ஒமைக்ரான் வைரஸ் அதிகமாகப் பரவக்கூடும். எங்கு அதிகம் பரவுகிறது என்பது உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் அதனால் கடுமையான விளைவுகள் ஏற்படலாம். ஒமைக்ரானால் ஏற்படும் உலகளாவிய ஆபத்து மிக அதிகமாக உள்ளது ஆரம்பகட்ட சான்றுகள் மூலம் தெரியவந்துள்ளது.

அதே வேளையில் இந்த வைரஸ் குறித்த கணிசமான நிச்சயமற்ற தன்மைகள், அறியப்படாத அம்சங்கள் உள்ளன. உருமாறிய இந்த வைரஸ் நோயறிதல், சிகிச்சை முறைகள், தடுப்பூசிகள் ஆகியவற்றை எவ்வாறு பாதிக்கும் என்பதைப் புரிந்துகொள்ள பல வாரங்கள் ஆகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் ஒமைக்ரான் நுண்மி தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால், இது ஒமைக்ரான் உடனான நோய்த்தொற்றின் விளைவாக அல்லாமல் ஒட்டுமொத்தமாக அதிகமானோர் தொற்றுக்குள்ளாவதால் இருக்கலாம்.

இது தொடர்பாக தொற்றுநோயியல் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**தடுப்பூசி சமநிலை:**

உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கூறுகையில், தடுப்பூசி சமநிலை அநீதியையே ஒமைக்ரான் வகை வைரஸ் பிரதிபலிக்கிறது. தடுப்பூசி சமநிலையை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது. அப்போதுதான் உலகெங்கும் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் சுகாதாரப் பணியாளர்கள், முதியோர் உள்ளிட்டோர் தங்களது முதல் மற்றும் இரண்டாவது தவணை தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள இயலும் என்றார்.

உலகசுகாதார அமைப்பின் உறுப்பு நாடுகள் பங்கேற்ற கூட்டம் காணொலி முறையில் நடைபெற்றது. அதில் டெட்ரோஸ் அதானோம் பேசுகையில், ஒமைக்ரான் வகை கொரோனா நமது நிலைமை எவ்வளவு ஆபத்தானது என்பதை அடிக்கோடிட்டுக்காண்பிக்கிறது. ஆதலால், எதிர்காலத்தில் நோய்த் தொற்றுகளை எதிர்த்துப் போராட சர்வதேச உடன்படிக்கை அவசியம் என்று கூறியுள்ளார்.

# பயணத் தடையை நீக்க வேண்டும்:

## தென் ஆபிரிக்க ஜனாதிபதி

தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமைக்ரான் வகை கொரோனா தொற்றால் உலகில் பீதி எழுந்துள்ள நிலையிலும், கொரோனா தொற்றை எதிர்கொள்ள குறைந்தளவிலான பொது முடக்க கட்டுப்பாடுகளையே தொடரப் போவதாக அந்நாட்டு ஜனாதிபதி சிறில் ரமபோசா அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் அதன் அண்டை நாடுகளின் பொருளாதாரம் மேலும் பாதிப்படையாமல் தவிர்க்கும் வகையில், அவற்றின் மீதான பயணத் தடைகளை நீக்க வேண்டுமெனவும் அவர் உலக நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா முதல் அலையை நாங்கள் எதிர்கொண்டபோது தடுப்பூசிகள் அதிகளவில் இல்லை. குறைந்த எண்ணிக்கையிலான மக்களே தடுப்பூசி செலுத்தியிருந்தனர். ஆனால், இப்போது நாடு முழுவதும் 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கிறது. அதை கவனத்தில் கொண்டு இப்போதைய நிலையில் கூடுதல் கட்டுப்பாடுகளை விதிப்பதில்லை என்கிற முடிவை எடுத்துள்ளோம்.

மிக நீண்ட காலத்துக்கு கொரோனா தொற்று நம்முடன் இருக்கும் என்பது



அறிந்துள்ளோம். ஆதலால், பொருளாதாரத்தை பாதிக்காத வகையில் நோய்த் தொற்றை எதிர்கொள்ளும் வழிகளைக் கண்டறிய வேண்டும்.

ரோம் நகரில் கடந்த மாதம் நடைபெற்ற ஜி-20 நாடுகள் கூட்டத்தில், சர்வதேச பயணத்தை பாதுகாப்பான வழிகளில் மீண்டும் தொடங்குவது என உறுதியளிக்கப்பட்டது. அதற்கு மாறாக இப்போது தென் ஆபிரிக்கா மீதான பயணத் தடையை நாடுகள் அறிவித்துள்ளன. எனவே, அத்தடையை நீக்க வேண்டும் என்றார்.




Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road on Wednesday 01st of December 2021.